# சிற்பி

423

(139) 423 / 1.59



MADRAS 1959

# பொங்கல் மலர்

# ராஜாராம் இண்டஸ்ட்ரீஸ்

தங்க நகை தயாரிப்பாளர் & டை ஒர்க்ஸ்

26/507 பெரியகடைவீதி, கோயமுத்தூர்.

உரிமையாளர் : V.A. பொன்னுசாமி ஆச்சாரி







# Rajaram Industries

Jewels Manufacturers & Die works

26/507, Big Bazaar St., Coimbatore.

*Prop :* **V.A. PONNUSAMY ACHARY**

H.O. COIMBATORE. BR. TRICHY.

# YAGAPPA [ Private ] LIMITED

★

Architects -- Builders -- Contractors

Structural & Sanitary

Engineers

Survey - Design - Construction - Estimates

Uudertaken

★

In the approved list of

P. W. D. & RAILWAYS

2511, POOKKARA STREET, TANJORE,

*Blue Metal Quarry at Thiruverambur.*


PHONE: 88. POST BOX: 45.

P. A. Y. AROKIASAMY NADAR,

GOVERNING DIRECTOR.

# THE TANJORE MUSICAL INSTRUMENTS CO-OPERATIVE PRODUCTION & SALE SOCIETY Ltd,

South Main St, Tanjore.




எங்களிடம்
எல்லாவித
இசை
வாத்தியகருவிகள்
உயர்ந்த
முறையில்
தயாரிக்கப்
பட்டது


கிடைக்கும்.

விபரங்கட்கு.

## இசைக்கருவிகள் கூட்டுறவு தயாரிப்பாளர் & விற்பனை சங்கம் (Ltd)

தெற்குவீதி, தஞ்சை.

---



அரசினர் ஆதரவுபெற்று நடந்து வரும் எங்கள் சங்கத்தில் புராதனக்கலையும் சரித்திர புகழ் பெற்றதுமான தஞ்சாவூர் தாம்பாள வேலைகளை மிக நேர்த்தியுடன் தயாரித்து வருகிறோம் இச் சங்கத்தை

சென்னை மாநில கைத்தொழில் இலகா டைரக்டர்
திரு, T. K **பழனியப்பன்** M.A. I.A.S.,
அவர்கள் 4—11—58ல் ஆரம்பித்துள்ளார்கள்.

—: விபரங்கட்கு :—

**தஞ்சாவூர் தாம்பாள வேலை கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம், தஞ்சாவூர்.**

**G. நடராச ஆச்சாரி,**
தலைவர்.

## "சில்பம் ஜகத் ஜீவனம்"

அன்புள்ள,

### ஆசிரியர் அவர்கட்கு,

தங்கள் "சிற்பி"க்கு எனது பொங்கல் வாழ்த்து பல உரித்தாகுக! பழமையிலும் புதுமையிலும் காணும் நல்லனவற்றை ஏற்று ஆயிரம் ஆண்டுகளாக இந்தியாவின் கலா சாரத்தை தங்களின் கலைத்திறனால், ஏன்? ஒப்பற்ற தியாகத்தால் காத்துவரும் பாரத நாட்டு சிற்பிகளின் வாழ்வு மலர, "சிற்பி" உழைப்பானாக.

அன்புள்ள,
**ந. பஞ்சாபகேசன்,**
பொள்ளாச்சி.

---


## [T.E.C.ஸீல்]

**கியாரண்டி பவுன் நகைகளுக்கும் அசல் வெள்ளி பாத்திரங் களுக்கும் உத்திரவாதமுள்ள இடம்.**

## கோகிலா ஜுவல்லரி

**மார்ட்,**

Pro:
**T. E. சொக்கலிங்கம் ஆச்சாரி,**
பெருமாள்கோவில் மேலரதவீதி,
திருநெல்வேலி ஜங்ஷன்.


---


**திங்கள் வெளியீடு.**

**சிற்பி**

"கலை வளர்ப்போம்—கொல்லர் உலை வளர்ப்போம்'
—பாரதியார்.

ஆசிரியர்: தில்லையாடி **ந. சண்முகம்,**

ஆதரவாளர்: **தி.ம. நடராசன் B.Sc.,**
(கௌரவ மாகான மாஜிஸ்டிரேட்)
சென்னை.

| மலர் 1 | விளம்பி—வரு<br>தை—மீ 1உ<br>14—1—1959. | இதழ் 5 |
|---|---|---|


## இதனுள்.


| | பக்கம். |
|---|---|
| பொங்குக பொங்கல்! (தலையங்கம்) | 2 |
| அட்டைப்பட விளக்கம். | 4 |
| ராஜாஜி வாழ்த்து | 5 |
| சிற்பிகள். | 6 |
| ஓவியக்காரன் | 8 |
| மஞ்சுளா | 9 |
| உடைந்த பேனா | 17 |
| பண்ணையார் – தொடர் நாடகம். | 20 |
| திருவுருவ அமைப்பிலக்கணம் | 24 |
| சிலப்பதிகாரத்தில் சாதித்துவேஷம். | 29 |
| கல்தச்சு வேலப்பாச்சாரி. | 33 |
| மாநாட்டுத் தந்தை. | 38 |
| ஓவியக்கலை. | 42 |


## விலை ரூ. 1


NM211, N59S
145385

For All Types of
Structural Steel Works.



EVEREST ENGINEERING WORKS,
CIVIL & STRUCTURAL ENGINEERS,
CROSS-CUT ROAD, COIMBATORE.

# சிற்பி.

## பொங்குக பொங்கல் !

**இன்று பொங்கல் பெருநாள். தமிழகத்தின் திருநாள். தமிழ் மக்களின் தனிப்பெரும் நன்னாள். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று கூறும் பண்புடைத்திருநாள். இன்று உழவர்களின் உள்ளங்களிலே இன்பம் பொங்குகிறது. இல்லங்களிலே பால் பொங்குகிறது. நாமும் 'பொங்கலோ பொங்கல்' எனக் கூறி வாழ்த்துகிறோம்.**

பொங்கல் பெருநாளில் கலைச்சமூகத்தினர்கள் வாழ்கவெனும் நல்லெண்ணத்துடன், நினைப்பெனும் பால் பெய்து நல்வாழ்த்தெனும் அமுதை இம்மலரில் இட்டு களிக்கின்றோம்.

காட்டையும் மேட்டையும் திருத்தி, கழனிகளாக்கி பயிர் செய்யும் பக்குவத்திலே நிலத்தை பண்படுத்தி பரம்பெடுத்து நீர்பாய்ச்சி, விதைபிட்டு, விளைந்தசெந்நெல்லை, கட்டு, கட்டாக கட்டி, களிபேருவகை அடைகின்றான் பாடுபட்டவன். இவ்வளவுக்கும் இயற்கையன்னை வழிகாட்டியானாள். "வானம் பொய்த்தால்" மானம் போய்விடும் என்ற உண்மையை உணர்ந்து வானத்தை நோக்கி எங்களை வாழ்விக்கும் தெய்வமே என்றும் எங்களை வாழவைக்க வேண்டும் என்ற பெருமிதத்துடன் வணங்குகின்றான் தமிழ்நாட்டினன்.

வானத்திற்கு நன்றி செலுத்தும் வண்டமிழ் நாட்டினர்களே! பார்முழுதும் ஏர் முனையிலே என்று பாட்டிசைக்கும் பண்பாளர்களே; உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் என்று கூறும் உத்தமர்களே! இந்த உயர் தமிழ் நாட்டிலே, உழவுக்கு உயிர்துணையாக இருந்தவன் வாடுகின்றான் 'ஏர்' முனையை செய்துக் கொடுத்தவன் ஏங்குகிறான். அவன் வாழ்விலே, வளமில்லை. அவர்கள் வாழ்வை வளமாக்கினால் தான் உழவுத் தொழில் சிறப்படையும். வேளாண்மைத் தொழிலை சிறப்புற பாடிய கம்பர் பெருமான் தனது ஏரெழுபது என்னும் நூலில்,

> "பாராளு முழவாலும் பயிராக்கி யுயிர்வளர்க்கும்
> பேராளர் பெருமையெல்லாம் பிறருடைய பெருமையெல்லாம்
> ஏராலெண்டிசை வளர்க்கும் எழுபத்தொன்பது நாட்டில்
> காராளர் பெருமையெல்லாம் கண்ணாளர் கைத்தொழிலே"

எனக் கூறியுள்ளார். எனவே, கண்ணாளர்களாகிய விசுவகர்மர்கள் வாழ்வு உயர்ந்தால்தான் உழவுத்தொழில் உயர்வடையும் என்பது நமது கருத்து.

எனவே விசுவகர்ம சமுதாயம் எல்லாவகையிலும் முன்னேறவேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளர்களுக்கு உண்டாகவேண்டும், என்று இப்பொங்கல் நன்னாளில் கூறுகின்றோம்.

## முகப்பில்

உலகம், என்ற 'பேரம்பலத்தில்' களி நடனம் புரிகின்ருன் இறைவன். கூத்தப் பெருமாளுகிய பெருமான் எல்லாவுயிர்களும் உய்யவேண்டி காலைத் தூக்கி ஆடுகின்ருன், ஆடிக்கொண்டேயிருக்கிருன். அவன் ஆட வில்லையென்ருல் உலகம் ஆடாது. ஜீவராசி கள் ஆடாது, அசையாது.

**" ஆட்டுவித்தார் யாரொருவர் ஆடாதாரே "**

என்ற வாக்கிற்கிணங்க, அவன் ஆட்டு விக்கிருன். நாம் ஆடுகின்ருேம். அண்ட சராசரங்கள் ஆடுகின்றது. அவன் ஆட்டம் நின்ருல் உலகத்தின் ஆட்டமே நின்றுவிடும். அணு சகாப்தமே முடிந்துவிடும்.

கூத்தபிராளுகிய நடராஜன் ஒருகாலை மேலே தூக்கி ஊர்த்தவ தாண்டவமாடுகின் ருன். நடராஜனின் ஆட்டத்தை மகாவிஷ்ணுவும் பிர்மதேவனும் கண்டுகளிக்கிருர்கள் அம்பலத்தில் ஆடும் பேருண்மையைத் தமிழ கத்து ஞானிகள் மனதில் எண்ணினுர்கள். ஆனல், தமிழ்நாட்டு 'சிற்பி'கள் இறைவன் நடனமாடுகின்ருன் என்ற உண்மையை உலகுக்குணர்த்த தன் திறமையெல்லாம் காட்டி கல்லிலே சிலையாக வடித்துள்ளார்கள் விசுவகர்மனிடம் கல்பேசிற்று. ஆம்! இல்லை யென்ருல் இத்துணை அழகு வாய்ந்த சிற் பத்தை நாம் காண முடியுமா? இதைப்போன்ற சிற்பத்தை வேறெங்குதான் காணமுடியும்.

இவ்வழகிய ஊர்த்தவதாண்டவ சிற்பத்தை கோவையை அடுத்த பேரூரில் இன்றும் காணலாம். ஊர்த்துவ தாண்டவ சிற்ப வடிவமே 'சிற்பி'யின் பொங்கல் மலரை சிறப் புறச் செய்கிறது. இவ்வழியா சிற்பத்தை நமக்கு எழுதிக் கொடுத்துள்ள அன்பர் கலைச் சமுகத்திலுதித்தவர். கலைக்காகவே வாழ்ந்த –வாழும் விசுவகர்ம சமுதாயத்திலுதித்த தில்லைநாயகம் என்பவராவர்.

# நன்றி

"சிற்பி"யின் பொங்கல் மலர் வெளியிட எல்லாவகை தொண்டுகளையும் செய்து கொடுத்த உள்ளூர், வெளியூர் அன்பர்களுக்கும், ஆசியும், வாழ்த்தும் வழங்கிய பெரியார் களுக்கும், கவிதை கட்டுரை தந்துதவிய எழுத்தாள நண்பர்களுக்கும் இரண்டே நாட் களில் அட்டைப் படத்தை தயாரித்துக் கொடுத்த தில்லைநாயகம் என்பாருக்கும், பல நெருக்கடிகளிலும் ஒத்துழைத்து உறுதுணை புரிந்த அச்சக தோழர்களுக்கும் விளம் பரங்கள் சேகரித்து கொடுத்த வெளியூர் நண்பர்களுக்கும் நமது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

— ஆசிரியர்.

## வாழ்த்துகிறார்கள்.

# ராஜாஜி

விஷயமும் வேலைப்பாடும் நன்றாக இருந்தால் யாருடைய ஆசியும் வேண்டியதில்லை. நடராஜன் அருள் இருந்தால் போதும். என் ஆசியையும் தருகின்றேன்.

இராஜகோபாலாச்சாரி.

* * *

# பேராசிரியர் மு. வ.

சென்னை
23—12—58.

அன்புடையீர்,

வணக்கம்

'சிற்பி'க்கு என் வாழ்த்துக்கள். முயற்சி வெல்க. கலை உயர்க.

அன்புள்ள,
மு. வரதராசன்.

# சிற்பிகள்.

[பா. சா. பார்த்தசாரதி.]

ஏர்மிகுந்த தமிழகத்தின ஏற்றஞ் சொல்லும்
எழில்மிகுந்த கல்வெட்டு என்றும் வாழ
சீர்மிகுந்த ஒப்பனையில் எழிலைத் தேக்கி
சிந்தையள்ளும் கற்பனையில் கலையத் தோய்த்து
கூர்மிகுந்த கல்லுளியால் பாறை யுள்ளே
கோலமிகும் சிலைக்கூடம் வடித்துத் தந்து
பார்மிகுந்த நற்பெயரைப் பெற்ற சிற்பி
பகலிரவின் நல்லுழைப்பால் நின்று வாழ்வான்.

அற்புதநல் அறிவுநூலை உலகே ஏற்க
அருஞ்சிற்பி வள்ளுவனார் நீதி தந்தார்;
கற்பனைசேர் காவியத்தை இளங்கோ சிற்பி
காற்சிலம்பாய் தமிழன்னை அணியச் செய்தார்;
சிற்பிகளாம் சிந்தனையில் என்ற மேலோர்
சிலைகளான மக்களெழ புரட்சி செய்தார்;
பற்பலகூர் விஞ்ஞான விந்தை ஆக்கும்
பகுத்தறிவுச் சிற்பிகளின் வழியில் செல்வீர்.

## 'சிற்பி' தரும் தேன் செய்தி !

சமூகத்தந்தை பெரியார் தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் F. R. S. A., (London) Ex M.L.C., அவர்களது வீர வரலாற்றை அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புப் பெற்ற, தொழிலுலகம் ஆசிரியர் குழித்தலை-பிச்சமூர்த்தியவர்கள் சிற்பியில் தொடர்ந்தெழுதுவார்கள். பெரியாரின் வரலாறு வருங்கால சந்ததிகளுக்கோர் வழிகாட்டியாகும்: பிரதிக்குப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

★ ★ ★

## சிற்பியின் வெளியீடுகள்.

" ஏழிசை மன்னர்
எம், கே தியாகராஜபாகவதர்! "

" கலைச் சமூகத்தின் விலையற்ற மணிகள் "

இயல், இசை, நாடகத்துறையில்
சிறக்க வாழும் கலைஞர்களது
வரலாற்றுக் குறிப்புகள்.

(புகைப்படங்களுடன்)

எழுதியவர்; 'சந்திரமோகன்'

விபரங்கட்கு.

'சிற்பி' செயலகம்,
அம்மாபேட்டை. :: (தஞ்சை)

# ஓவியக்காரன்

**பாரதிதாசன்.**

ஓவியம் வரைந்தான்—அவன் தன்
உளத்தினை வரைந்தான்!
ஒல்லி இடை எழில் முல்லை நகை இரு
வில்லை நிகர் நுதல் செல்வியை வைத்தே
ஓவியம் வரைந்தான்!

கூவும் குயில்தனைக் கூவாதிருத்திக்
கூந்தல் சரிந்ததென் றேந்தித் திருத்தி
மாவின் வடுப்போன்ற கண்ணை வருத்தி
வஞ்சியின்நெஞ்சத்தைத் தன்பாற்பொருத்தித்
தேவை எழுதுகோல் வண்ணம் நனைத்தே
தீர்ந்தது தீர்ந்தது சாய்ந்திடேல் என்றே
ஓவியம் வரைந்தான்!

காதலைக் கண்ணிலே வை என்று சொல்வான்
கணவனாக என்னை எண்ணென்று சொல்வா [ன்
ஈதல்ல இவ்வாறு நில்லென்று சொல்வான்
இதழில் மின்னலை ஏற்றென்று சொல்வான்
கோணத அடியில் தன் கை கூப்புதல் போலவும்
கொள்கை மகிழ்ந்தவள் காப்பது போலவும்
ஓவியம் வரைந்தான்!

★ ★
★

# மஞ்சுளா.

கோடை விடுமுறையை இன்பமாகக் கழிக்க நானும், என் நண்பர்கள் சிலரும் வேதபுரிக் கோவிலுக்குப் போய் வருவதாகத் திட்டமிட்டிருந்தோம். காலை ஆறு மணிக்கே எல்லோரும் வேதபுரியை நோக்கிக் கிளம்பி விட்டோம். ஆயினும், மலைச் சரிவில் அமைந்திருந்த கோவிலை அடையும் பொழுது கதிரவன் வானத்தின் உச்சியை அடைந்திருந்தான்.

எல்லோருமாகக் கோவிலை அடைந்து அதைச் சுற்றிப் பார்க்கலானோம். எல்லா இடங்களிலும் புதிய அழகுடன் விளங்கிய ஓவியங்கள், சிற்பங்கள் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. உண்மையாகவே அது ஒரு கலைக் கோவிலாகத்தான் திகழ்ந்தது.

அவ்வோவியங்களுள் "மஞ்சுளா" என்ற பெயருடன் தீட்டப் பட்டிருந்த இள மங்கையின் ஓவியம்தான் எல்லோரையும் கவர்ந்ததெனலாம். மேகக் கருங் குழலும், மதிமுகமும், கயற்கண்களும், பவள உதடுகளும், அழகிய தாமரைக் கைகளும், வனப்பு வாய்ந்த உடற்கட்டும் மிகச் சிறந்த முறையில் அமைந்திருந்தன. இவற்றையெல்லாம் நண்பர்களும், நானும் வியப்புடன் நோக்கிக் கொண்டிருக்கும்போது அதே ஓவியம் கோவிலுக்குள் நடந்து வந்தது. சுவரிலிருந்த மஞ்சுளாவின் ஓவியத்திற்கும், எதிரே வந்து நின்ற அந்த அம்மையாருக்கும் உருவத்தில் எள்ளளவும் வேற்றுமையிருக்கவில்லை. ஓவியத்திலிருந்த மஞ்சுளா பற்பல அணிகளுடன் புன்னகை பூத்த முகத்தினளாய்ப் பதினெட்டு வயது மதிக்கும்படிக் காட்சியளித்தாள். எதிரே நின்ற அம்மையாரோ ஏறக்குறைய முப்பது வயதினளாகவும், துறவுக் கோலத்துடனும், துயரங்கொண்ட முகத்துடனும் காட்சியளித்தாள்.

எங்கள் முகத்திலிருந்த வியப்பைக் கண்ட அந்த அம்மையார் ஒரு வரட்டுப் புன்னகையுடன், "அவள் யாரென்று பார்க்கிறீர்களா? நான் தான்" ஆச்சர்யபடாதீர்கள் என்றாள்.

எங்கள் வியப்பைக்கண்ட அவள் தன் வரலாற்றைக் கதையாகச் சொல்லி முடித்தாள்.

* * *

"அன்று மகேந்திரபுரமே மிகுந்த மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தது. அரசன் மகேந்திரவர்மனின் ஒரே மகளான மஞ்சுளாவின் பதினெட்டாவது ஆண்டு விழாவைக் கொண்டாட நாடெங்கும் மக்கள் தத்தம் வீடுகளை அழகு செய்யலாயினர். நகர பெருமக்களெல்லோரும் தங்களுடைய குழந்தைகளின் 'பிறந்தநாள் விழா' வந்து விட்டதுபோல மனம் மகிழ்ந்தனர். மகிழ்ச்சியின் ஆரவாரம் எங்கும் நிரம்பியிருந்தது. விதவிதமான வண்ண உடைகளுடன் ஆடவரும், மங்கையரும் வீதியில் செல்லும் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வெளிநாடுகளிலிருந்து வந்த அரசிளங் குமாரர்களும், பிரமுகர்களும், கலைஞர்களும் மகேந்திரபுரியில் வந்து குழுமிய வண்ணமாக இருந்தனர். தளர்நடை போடும் கிழவர்களும் மிக்க மகிழ்வுடன் வாலிபர்களைப் போல நிமிர்ந்து நடந்தனர்.

இக்கூட்டத்தில் அழகே உருவான ஒரு ஓவியக் கலைஞன் சோர்ந்த நடையினனாக வந்துகொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த உடைகளே அவனை அந்த மக்கள் கூட்டத்திலிருந்து பிரித்து காண்பித்தது. ஏழ்மையின் சிகரமாக அவன் விளங்கிக் கொண்டிருந்தால். அவனும் தன் கலைத் திறனைப் பல மன்னர்களிடமும், செல்வந்தர்களிடம் காட்டிப் பார்த்து விட்டான். ஆயினும் கலைஞனுக்கு உடன் பிறப்பான வறுமை அவனை மட்டும் விட்டுவிடுமா? கொடிய வறுமை தன் கலைத்திறனை அக்கலைஞனிடமே காட்டிவிட்டது. அவன் தன் விதியை நொந்

படியே அரண்மனையருகே வரும்பொழுது தான், நிலாமாடத்திலிருந்து தன்னை யாரோ கூர்ந்து நோக்குவதை அறிந்து கொண்டான் அவன் கண்கள் மாடத்தை நோக்கின. இளவரசி விசுக்கென உள்ளே சென்று மறைந்தாள்.

*   *   *

**நே**ரம் ஆக ஆக அரண்மனை மனித வெள்ளத்தில் மூழ்கலாயிற்று. சிறிது நேரத்தில் மஞ்சுளாவும், மகேந்திரவர்மனும், மற்ற அரசியல் அலுவலர்களும் சபா மண்டபத்தில் வந்தமர்ந்தனர். முனிவர்கள் வாழ்த்துக் கூற மக்கள் மனமகிழ மஞ்சுளாவின் பிறந்த நாள் கொண்டாட்டம் இனிதே நிறைவேறியது. இறுதியாக மக்களுக்கு தான தருமங்களும், கலைஞர்களுக்கும், புலவர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

மன்னர் எழுந்து நின்று, "அன்பு மிக்க பெரியோர்களே! இளவரசியின் பிறந்த நாளாகிய இப்பொன்னுளில் நாம் எல்லோரும் ஒன்று கூடியுள்ளோம். உலகம் முழுவதுமுள்ள கலைஞர்களும், புலவர்களும் ஒருங்கே அமர்ந்துள்ளனர் மஞ்சுளாவின் பிறந்த நாள் விழாவை ஒட்டி ஒரு ஓவியப்போட்டியும் வைக்கலாமென்பது என் எண்ணம். எனக்குத்தான் ஓவியப்பித்து மிகுதி என்பது உங்கள் யாவருக்கும் தெரியுமல்லவா? ஆகவே ஓவியப் போட்டியில் கலந்து கொள்ள விருப்பமுள்ள கலைஞர்கள் மாலை ஐந்து மணிக்கு என்னை வந்து காணுமாறு வேண்டுகிறேன்" எனறு கூறிவிட்டு அமர்ந்தார்.

*   *   *

**மா**லை ஐந்து மணி அடிப்பதற்குள்ளாகவே ஏராளமான ஓவியர்கள் அரசரின் தனியறைக்கு வெளியே நிரம்பியிருந்தனர். வாயிற் காவலன் ஒவ்வொருவராக உள்ளே செல்லுமாறு அவர்களிடம் கேட்டதன் பேரில் முதன் முதலாக மனோஹரன் என்னும் ஓவியன் உள்ளே சென்றான். உள்ளே மகேந்திரவர்மரும், மஞ்சுளாவும் அமர்ந்திருந்தனர். மனோஹரன் அரசரையும், இளவரசியையும் வணங்கிவிட்டு நிமிர்ந்தான். அவன் கண்கள் வியப்பால் விரிந்தன. நிலாமாடத்தின் தான்






## தேவை.

மரச்சிற்றுளி வேலையில் தேர்ச்சிபெற்று வாகனம், தேர் முதலியவை செய்யும் திறமைவாய்ந்த சிற்பத் தொழிலாளர்கள் தேவை. தங்கள் வேலைத்திறமை அனுபவம் முதலிய விபரங்களை உடனே அடியிற்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கவும்.

**தி. ம. நடராசன்** *B. Sc, J. P.*
பொதுச்செயலாளர்,
தமிழ் நாடு சிற்பக்கலைக் கழகம்,
7-A. கருப்பனலிகான் தெரு
உட்ஸ்ரோடு, சென்னை 2.

கண்ட பெண் ஓர் அரச குமாரியா என்றறிந்த அவன் திகைத்தான். இளவரசி மஞ்சுளாவும் முதலில் திகைப்புற்றாலும், பின்னர்த் தன் உள்ளங் கவர்ந்தவன் ஒரு சிறந்த ஓவியன் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தாள்.

மனோஹரன் தன்னுடைய திகைப்பை அடக்கிக் கொண்டு மன்னரிடம் தன்னுடைய பெயரையும், மற்ற விவரங்களையும் கூறிவிட்டு வெளியேறினான். மற்ற கலைஞர்களும் போட்டியில் பதிவாயினர்.

* * *

"அப்பா! இந்த ஓவியத்தைப் பாருங்கள்! இது எவ்வளவு அழகா இருக்கிறது? உண்மையாகவே இதில் பாவம் ததும்பவில்லை?" என்று கூறிக் கொண்டே போட்டிக்கு வந்திருந்த ஓவியமொன்றை எடுத்துத் தன் தந்தையிடம் காண்பித்தாள், மஞ்சுளா. அது, ஒரு தாய் அன்புடன் தன் குழந்தையை அணைத்துக் கொள்ளும் காட்சி. அந்தத் தாயின் முகத்தில் பாசமும், பரிவும், அன்பும், அருளும் மிளிர்ந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்தார் மன்னர்.

"ஆமாம் மஞ்சுளா! மிக நன்றாகத்தான் இருக்கிறது. அரண்மனை ஓவியர்களும் இதைத்தான் மிகப் புகழ்ந்தார்கள். நானும் இதற்கே முதற் பரிசென்று முடிவு செய்து விட்டேன். ஆமாம், இதை வரைந்த ஓவியர் யார்?" என்று கேட்டபடியே அந்த ஓவியத்துடன் இணைக்கப் பட்டிருந்த ஒரு துண்டுச் சீட்டைப் பார்த்தார் மன்னர். அதில் 'மனோஹரன்' என்று மட்டும் எழுதப்பட்டிருந்தது.

"என்ன இது? மற்ற ஓவியர்களெல்லோரும் தங்களைத் தாங்களே புகழ்ந்து எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த ஓவியனோ தன் முகவரியைக் கூடத் தரவில்லையே?" என்று வியப்பில் ஆழ்ந்தார் மன்னர்.

இந்தப் புகழ்ச்சி மொழிகளைக் கேட்ட மஞ்சுளாவின் உள்ளம் பெருமிதமடைந்தது.

* * *

சிறிது திறந்தவாறே வைக்கப்பட்டிருந்த கதவை நன்றாகத் திறந்து கொண்டு இளவரசி மஞ்சுளா மெதுவாக உள்ளே நுழைந்தாள். அது ஒரு விருந்தினர் விடுதி. அது ஓவியன் மனோஹரனுக்காக அரசரால் கொடுக்கப் பட்டிருந்தது. கலைஞர்களைப் போற்றும் மன்னர் கலைப்போட்டியில் வெற்றி பெற்ற கலைஞனை அவ்வளவு எளிதில் விட்டு விடுவாரா? மனோஹரனுக்கு ஓவியப் பணிகள் பலவும் மன்னனால் தரப்பட்டன.

மஞ்சுளா, உள்ளே ஓவியம் தீட்டுவதில் ஆழ்ந்திருந்த மனோகரனைக் கண்டாள். அருகிலிருந்த சுவர்களில் அவனால் தீட்டப் பட்டிருந்த மனித உருவங்கள் உண்மையான மனிதர்களைப் போலவே தோன்றின.

ஓவியத்தின் மீது ஏதோ நிழல் விழுவது கண்டு சட்டெனத் திரும்பினான் மனோகரன். "ஆ! இளவரசியா! இந்த இடத்திற்கு நீங்களா வருவது?" என்று சற்றுத் திகைப்புடன் வினவினான், அவன்.

"ஏன்? நான் தங்களுடைய ஓவியங்களைப் பார்க்க வரக் கூடாதா?"

"இளவரசி! அதற்காகச் சொல்லவில்லை. தங்கள் அடிமை நான். கட்டளையிட்டால் நானே அரண்மனைக்கு வந்திருப்பேனே?"

"அதனாலென்ன? கனியை நோக்கிப் பறவைகள் வருவது போல, ஓவியத்தைக் காண நான் வருகிறேன். கனிகள் தாமாகவே சென்று பறவைகளுக்கு உணவாவது உண்டா? பறவைகள் தானே அவற்றை நாடிச் சென்று பெற்று மகிழ்கின்றன? இதில் தவறென்ன இருக்கிறது?", என்று கூறி நிலவென நகைத்தாள், மஞ்சுளா.

"இளவரசி! நீங்கள் உலக இயல்பை அறியாமல் பேசுகிறீர்கள் உங்களுக்கு என்னைத் தனியாகப் பார்க்க வரும் இந்தச் செயல் விளையாட்டாக இருக்கலாம். ஆனால் இந்தச் செய்தி மட்டும் அரசர் காதில் எட்டி விட்டால் என் தலை தான் நிலத்தில் உருளும் ஆகவே, தயவு செய்து உடனே அரண்மனைக்குத் திரும்பிச் செல்லுங்கள். நாளைய தினம் என்னுடைய எல்லா ஓவியங்களையும் அரசவையில் வைத்துக் காண்பித்து விடுகிறேன். சரிதானே?", என்று சிறிது அச்சத்துடன் கூறினான், மனோஹரன்.

# நகைத்தொழில் புரியும் நண்பர்கட்கு.

நமது 'சிற்பி"யின் சென்ற இதழில் தூத்துக்குடி விசுவகர்ம நகைத் தொழிலாளர் சங்க மகா சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் பிரசுரமானதை படிக்க நேர்ந்தது. அவற்றுள் எனது பேரன் புள்ள தேசபக்தர் திரு பன்னிருகைப்பெருமாளாச்சாரியார் பேச்சைக்கவனிக்கையில் அன்னுர் உளம் மிக உருகி–நகைத்தொழிலாளர்களை எவ்வாறு அடிமைகளாக நடத்தப்படுகிருர்கள் என்பது பற்றியும் தீபாவளிக்குக்கூட போனஸ் எதுவும் கொடுப்பது இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, நகைத் தொழிலாளர்கள் நலன் கருதி அடியிற்கண்ட விஷயங்களை அறிவிக்க விரும்புகிறேன்.

மாதச்சம்பளம் வாங்கும் தொழிலாளர்கள் எவராக இருப்பினும் அவர்கட்கு வார விடுமுறைகள் தவிர—15 நாள் சம்பளத்தோடு ஒப்பும் ஒரு மாதச்சம்பளத்திற்குக் குறையாத வெகுமதி (போனஸ்) தொகையும் கொடுக்க வேண்டுமென்பது விதி. இவ்வாறே செய்தவேலைக்குக் கூலி பெற்று ஒரு வருடத்திற்குக் குறையாத காலத்திற்கு வேலைசெய்து வந்தால் ஒரு வருடத்தில் மொத்தம் எவ்வளவு கூலி கிடைக்கிறதோ அதில் 12-ல் ஒரு பங்கு இனமாக (போனஸ்) பெறும் உரிமையுண்டு உதாரணமாக, ஒரு தொழிலாளி ப. ம. கடையில் நகைகள் செய்து கொடுத்து அவற்றின் கூலியாக 1957வது வருடத்தில் ரூ 1200. பெற்றிருந்தால் அவருக்கு அந்த ப. ம. கடை அதிபர் ரூ. 100 இனமாக வருடக்கடைசியில் கொடுத்தாக வேண்டும். இவ்வாறு கொடுக்காதவர்களிடம் உரிமையுடன் கேட்பதற்கு நம் தொழிலாளர்களுக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு கொடுக்காவிடில் தமது பகுதியைச் சார்ந்த லேபர் இன்ஸ்பெக்டருக்கு மனுச்செய்து கொள்ளலாம். அவர் கவனிக்காவிடின் நமது காரியாலயத்திற்கு அறிவித்தால் அவசியமான நடவடிக்கைகள் எடுத்து இனம் தொகை அத்தொழிலாளிக்கு வாங்கிக்கொடுக்கபடும்.

**தி. ம. நடராசன்**
தென்மானிலச் செயலாளர்,
அகில இந்திய விசுவகர்ம மகாசங்கம்,
7. A. கருப்பனலிகான் தெரு, உட்ஸ்ரோடு
சென்னை 2.

## இனம்!

நமது "சிற்பி" பத்திரிகைக்கு–10 சந்தாதாரர்கள் சேர்த்து அவர்களின் சந்தாத் தொகை ரூ 40 அட்வான்ஸாக நமது செயலகத்திற்கு அனுப்பும் நண்பர்கட்கு ஒரு வருடம் "சிற்பி"ப் பத்திரிகை இனமாக அனுப்பப்பெறும்.

நிர்வாகி,
**"சிற்பி" செயலகம்**
அம்மாபேட்டை. (தஞ்சை)

"சரி, நான் வருகிறேன். என்ன செய்வது? உங்களுக்கும் நான் இங்கு வருவது பிடிக்கவில்லை" என்று சிறிது வருத்தத்துடன் கூறிவிட்டு மின்னலென மறைந்தாள் மஞ்சுளா.

மனோஹரனிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது!

* * *

அரண்மனைக்குச் சென்ற மஞ்சுளா இரவில் உறக்கமின்றி விழித்திருந்தாள். அவள் தன் மனதை எவ்வளவோ கட்டுப்படுத்தியும், அது மனோஹரனையே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. "ஆ! அவருடைய அமைதி தவழும் முகமும், கருணை பொழியும் கண்களும், நீண்ட மூக்கும், சுருள் சுருளான தலைமயிரும் என் மனதை விட்டு அகலமாட்டேனென்கின்றனவே? அவற்றை நினைப்பதில் எல்லையில்லாப் பேரின்பம் தோன்றுகின்றதே!" என்றிவ்வாருக எண்ணமிட்டுக் கொண்டிருந்த மஞ்சுளா, தன் அறையினுள் மன்னர் மகேந்திரவர்மர் நுழைவதைக் கூட கவனிக்கவில்லை.

"என்னம்மா மஞ்சுளா! மணி பன்னிரண்டாகப் போகிறதே! இன்னும் தூக்கம் வரவில்லையா?" என்று மன்னர் கேட்டபிறகு தான் திடுக்கிட்டுத் திரும்பினுள் மஞ்சுளா.

"ஒன்றுமில்லையப்பா" என்று மழுப்பி விட்டுப் படுக்கையில் சாய்ந்தாள் அவள்.

* * *

"அரசே! நான் அவசியமாக இன்றே என் ஊருக்குப் போயாகவேண்டும். எனக்காக மல்லிகா காத்திருப்பாள். என் பிரிவை அவளால் இனியும் தாங்க முடியாது."

"சரி...என்ன செய்வது? அத்துணை அவசியமானுல் நான் என்ன சொல்லமுடியும் இன்றேபயணத்திற்காகவேண்டியவசதிகளைச் செய்து தருகிறேன். விரைவில் திரும்புவீர்களல்லவா?"

"என்ன அரசே!, அப்படிக் கேட்டு விட்டீர்கள்? நான் கூடியவிரைவில் வந்து சேர்ந்து விடுவேன் வணக்கம். வருகிறேன் அரசே."

மன்னரும், மனோஹரனும் பேசிய இந்த இறுதிப் பேச்சுக்கள் மஞ்சுளாவைத் திகைக்கவைத்தன. அடுத்த அறையிலிருந்து தான் கேட்ட இப்பேச்சினுல் மஞ்சுளாவின் மனம் பலவிதமாக எண்ண ஆரம்பித்தது.

"என்ன இது? அவசியம் இன்றே! போகவேண்டுமாமே? மல்லிகா காத்திருப்பாளாம்......இவருடைய பிரிவைத் தாங்க மாட்டாளாம். யார் அது? அந்த மல்லிகா? ஒரு வேளை......ஐயோ! அப்படியானுல் என் நிலை என்னுவது? இவருக்கு வேருெரு காதலி இருக்கிருள் என்பதை முன்னரே அறியாமல் போய்விட்டேனே?" என்றிவ்வாருக எண்ணமிட்ட மஞ்சுளாவின் மூளை குழம்பியது.

குழந்தையொன்று மிக ஆவலுடன் விளையாட வைத்துக் கொண்டிருக்கும் பொம்மை உடைந்து விட்டாலோ அல்லது யாரேனும் அதைப் பிடுங்கிக் கொண்டு விட்டாலோ அந்தக் குழந்தைக்கு ஏற்படும் துன்பம் சிறிதல்ல, அந்த ஆவல் மிகுதியினுல் அக்குழந்தை தான் விரும்பிய பொருளைத் திரும்பப்பெறத் தவருன வழிகளையும் கையாளக்கூடும். இந்த நிலையில்தான் மஞ்சுளா இருந்தாள். அவளுடைய மனக் குரங்கு மெதுவாக வேலை செய்ய ஆரம்பித்தது.

* * *

**வே**தபுரியில் ஒரு சிறிய வீடு. உள்ளே ஓர் அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தோட்டத்துப் புதர்களில் மறைந்து மறைந்து வெளிப்பட்ட ஓர் உருவம் வெளிச்சம் தெரிந்த அறையின் சாளரம் வழியாக உள்ளே பார்த்தது. உள்ளே பதினெட்டு வயது மதிக்கத் தக்க மங்கையொருத்தி ஏதோ சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தாள். வெளியே இருந்த உருவம் அந்த அறையை ஆராய்ந்து பார்த்தது. ஓவியங்களும் வண்ணக் கலவைகளும் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்தன. சுவரில் மனோஹரனின் படமொன்றும் இருப்பதைக் கண்ட உருவம், "சரிதான், கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போலாயிற்று. இவள் தான் மல்

லிகை மலர் போலிருக்கிறது........அடடா பெண் இரதி போலத்தான் இருக்கிருள் இவளைப் பார்த்து அவர் மயங்கியதில் என்ன இருக்கிறது?........உம்........நம் தலை விதி இப்படியென்றல் அதற்கு என்ன செய்வது?...... ஏ! அழகுச் சிலையே! இன்னும் சிறிது நேரத்தில் என்ன ஆகிறது பார்த்துக்கொள். எனக்கு வஞ்சனை செய்ய எண்ணிய உன்னை இந்த நஞ்சுதோய்ந்த கத்தி வஞ்சனை செய்யப் போகிறது! என் காதலனை நேசிக்க நீ யாரடி? நீலி! வஞ்சகப் பேயே! மரணத்தை வரவேற்க ஆயத்தமாக இரு", என்று பலவிதமாக எண்ணலாயிற்று.

"உம்......இன்னும் மனோஹரைக் காணவில்லையே? எத்துணை நேரமாகக் காத்திருப்பது?" என்று சலிப்புடன் முனகியவாறே ஏக்கத்துடன் வாயிலை நோக்கிக் கொண்டிருந்தாள், அந்த மங்கை.

" அடடா! என்ன அன்பு! என்ன அன்பு!! இனி மனோஹரைக் காண முடியாதம்மா! வீணிலே காத்திருப்பதேன்?'' என்று ஏளனமாக மனதினுள் நகைத்துக் கொண்ட அவ்வுருவம் "மல்லிகையின் மணத்தை மண்ணோடு மண்ணாக்குகிறேன்," என்று கறுவியபடியே மெதுவாகத் தோட்டத்தைக் கடந்து வெளிச்சம் தெரிந்த அந்த அறையை நோக்கி நகர்ந்தது.

* * *

அடிமேல் அடிவைத்து நடந்து கொண்டிருந்த அவ்வுருவத்தின் காலடியில் ஏதோ ஒரு மரப்பலகை இடறியது, அந்த உருவம் குனிந்து அந்த மரப்பலகையை எடுத்துத் திருப்பிப் பார்த்தது, ஆ! அதில்.........உருவம் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டது! அதிலிருந்தது மல்லிகாவின் ஒவியம் தான்! உருவம் சினத்துடன் அந்த ஓவியத்தைக் கீழே எறிந்தது."படார்" என்ற பெருத்த ஓசையுடன் உடைந்து சிதறியது அந்த மரப்பலகை!

இந்த ஓசையைக் கேட்டு அடுத்த அறையிலிருந்து, "'யாரது?" என்று கேட்டபடியே ஓடிவந்த மல்லிகாவின் மார்பில் ஒரு கூரிய கத்தி பாய்ந்தது. அந்த உருவம் அறையை விட்டு ஓடியது. "ஐயோ!" என்று கதறியபடியே குருதி வெள்ளத்தில் துடித்தாள், மல்லிகா!

ஏதோ மனித அரவம் கேட்கவே வெளிப்பட்ட அவ்வுருவம் சட்டென்று ஒரு பெரிய கதவின் பின்னல் மறைந்து கொண்டது.

உள்ளே வந்தவன் மனோஹரன்! அப்பொழுதுதான் மகேந்திரபுரியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த அவன் உள்ளேயிருந்து வந்த மல்லிகாவின் அலறலைக் கேட்டு ஓடினான். "ஐயோ, மல்லிகா! மல்லிகா!", என்று கதறிய அவன் குரலுக்கு, "அண்ணா!" என்ற ஒரே சொல் மட்டுமே மல்லிகாவின் வாயிலிருந்து வெளிவந்தது. ஆம்! அவளுயிர் பிரிந்து விட்டது.

"ஐயோ மல்லிகா! எனக்கென்றிருந்த என் ஆசைத் தங்கையாகிய உனக்காகத் தானே மகேந்திரபுரியிலிருந்து ஓடோடி வந்தேன்? அதற்குள் நம்மேல் பொருமை கொண்டிருந்த யாரோ உன்னைக் கொன்று விட்டார்களே? என்னைப் பிரிந்து போய்விட்டாயே மல்லிகா!......இல்லை......இல்லை......நீ என்னைப் பிரிய மாட்டாய். இதோ நானும் உன்னுடன் வந்து விடுகிறேன்''.

ஆவேசமாகச் சொற்களை உதிர்த்த மனோஹரன் தங்கையின் மீது பாய்ந்திருந்த கத்தியை உருவினான். மறுகணம் "ஹா" என்ற அலறல் மட்டுமே கேட்டது.

இந்த இரண்டு கொலைகளுக்கும் காரணமாகிக் கதவின் பின்னல் மறைந்து கொண்டிருந்த உருவம் "ஐயோ, மனோஹர்!'' உங்களுடைய தங்கை மல்லிகாவை நான் தவருக எண்ணிவிட்டேனே! பெண் புத்தி பின் புத்தியென்பது என் வரைக்கும் உண்மையாகி விட்டதே! என்று கதறினாள் மஞ்சுளா. இந்தக் கதறலைக் கேட்க மனோஹரின் உயிர் உடலில் இருந்தால்தானே? அதுதான் அப்பொழுதே மல்லிகாவைத் தேடச் சென்று விட்டதே! மாண்டார் மீண்டதில்லை என்பதை நினைத்து வருந்திய மஞ்சுளா மனமொடிந்துபோய்த் துறவியாகச் சென்று விட்டாள். அவளுடைய தந்தையும் ஒரே

## இன்னிசை விருந்தளிக்கும்

இசைச் செல்வி:

## T. R. செண்பகவல்லி-ராமமூர்த்தி



முகவரி:

திருமதி,

**T. R. செண்பகவல்லி-ராமமூர்த்தி**

2/1, வெங்கைய செட்டித்தெரு,

மதராஸ்-3.



**நீங்கள் சந்தாதாரராய் சேர்ந்து விட்டீர்களா?**

**இல்லையேல் இன்றே சந்தாதார் ஆக பதிவு செய்து கொள்ளுங்கள்.**

**சிற்பி.**


செல்வ மகளைக் காணாமல் மனமொடிந்து இறந்துபோனார்.

* * *

**இ**து வரைக்கும் கதையைக் கூறி முடித்த மஞ்சுளா, கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "என்ன செய்வதென்றே எனக்கு இறுதியில் புலப்படவில்லை. நான் என் விதியை நொந்து கொண்டே என் காதலரான மனோஹரின் ஊரான இந்த வேதபுரியைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன். இக்கலைக் கோவிலை அவரே கட்டியதாகத் தெரிய வந்தது. உள்ளே வந்து பார்த்ததும் என் நெஞ்சே வெடித்து விடும் போலாகி விட்டது. எல்லா ஓவியங்களுக்கும் நடுவாக என் அன்பர் என்னுடைய ஓவியத்தையே வரைந்திருப்பதைக் கண்டேன். நான் அவருடைய மனதில் பூரணமாக நிலைத்திருந்தேன் என்பதை அறிந்து கொண்டேன்.

இனி அழுது என்ன பயன்? தற்கொலை செய்து கொள்ளவும் பாழும் மனம் இசையவில்லை. அரச போகத்தில், துன்பமே அறியாமலிருந்து பழக்கப்பட்ட நான் கத்தி முனையில் எப்படி உயிரை விட முடியும்? ஆகவே இந்தக் கலைக் கோவிலையே இருப்பிடமாகக் கொண்டு உலகத் தொடர்பில்லாத நடைப் பிணமாக அவரை நினைத்தவாறு வாழ்ந்து வருகிறேன். இந்த ஊர் முன்பே ஒரு சிறு கிராமமாக இருந்தது. தற்பொழுது ஊர் மக்கள் யாவரும் நகர வாழ்வை நாடிச் சென்று விட்டதால் நடமாற்ற மற்றதாகி விட்டது", என்று கூறியபடியே திடீரென்று எழுந்து எங்கோ! சென்று விட்டாள்.



வாழ்த்துகிறார்!

## சிரிப்பு நடிகர் டணால், தங்கவேலு.



★

ரசிகர்களுக்கும்

வாசகர்களுக்கும்

எனது உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்து.

★

"சிற்பி" நீடூழி வாழ்ந்து நாட்டுக்கும், மக்களுக்கும், நல்லதொண்டுகள் செய்யுமென்று நம்பி தமிழர் திருநாளாகிய தைப்பொங்கல் பெருநாளிலே, மனமாற வாழ்த்துகிறேன்.

வாழ்க தங்கள் "சிற்பி"

தங்களன்புள்ள,

**K. A. தங்கவேலு.**

# உடைந்த பேனா.

[கே. சுப்ரமண்யன் B. A.]

காலேஜ் மணி 'டாண், டாண்' என்று ஒலித்துக் கொண்டிருந்தது. ஆங்காங்கு நின்று படித்துக் கொண்டும், அளவளாவிக் கொண்டுமிருந்த மாணவர்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அவரவர்கள் தங்கள் புத்தகங்களை மூடிவிட்டு வகுப்பறையை அடைந்து தங்கள் தங்கள் இடங்களில் போய் அமர்ந்து கொண்டனர்.

மணி அடிப்பதற்கு முன்னமேயே வந்து அமர்ந்து கொண்ட பாஸ்கரனும், சுசீலாவும் ஆழ்ந்த யோசனையில் இருந்தனர். அது பரீட்சைத் தாள்களைப் பற்றிய சிந்தனை தானோ என்னவோ!

கடைசி இரண்டு பரீட்சைகளும் அன்று நடக்க இருந்தன. மேற்பார்வையாளர்கள் பரீட்சைத் தாள்களை மௌனமாக வழங்க ஆரம்பித்தனர். எங்கும் அமைதி குடி கொண்டிருந்தது.

பரீட்சை முடிந்து எல்லோரும் வெளியே வந்து கொண்டிருந்தனர். பாஸ்கரன் தான், முதலில் பேச்சை அரம்பித்தான்.

"என்ன சேகர் பேப்பர் எப்படி?"

"அதை ஏன் கேட்கிறாய்போ, ரொம்ப 'அன்எக்ஸ்பெக்டட்'"

"நாம் 'ஓமிட்' பண்ணின கேள்விகளையெல்லாம் கேட்டுத் தொலைத்து விட்டான்" என்று வருத்தப் பட்டுக் கொண்டான். ராமகிருஷ்ணன், உடனே ஞாபகம் வந்தவனைப்போல் "ஏம்பா பாஸ்கர்! நீயுமா ஏமாந்து போனே?" என்றான்.

"கேள்விகளெல்லாம் ரொம்ப மடத்தனமாயிருக்கு" என்று தனது அபிப்ராயத்தைத் தெரிவித்துக் கொண்டான், பாஸ்கரன்

மூன்று நண்பர்களும் 'கூல் ட்ரிங்' சாப்பிடுவதற்காக எதிரில் உள்ள ஒரு ஹோட்டலில் நுழைந்தனர்.

"பாஸ்கர்! கவலைப்படாதே! மத்யான பேப்பரில் ஒரு கை பார்த்துவிடுவோம்!" என்றான் ராமகிருஷ்ணன் அவனைத் தேற்றும் முறையில்.

அதற்குள்ளாகவே 'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டு மூவரும் திரும்பினர். அவர்களுக்குச் சற்று தூரத்தில் மூன்று பெண்கள் அமர்ந்திருந்தனர். சுசீலாதான் சிரித்தாள்.

"அப்படின்னா நீ ரொம்ப நல்லா எழுதியிருக்கேன்னு சொல்லு" என்று கேட்டாள் ஹேமலதா.

"ஏண்டி இது என்ன கேள்வி? அவள் முகத்தில் தான் 'நன்றாய் எழுதியிருக்கிறாள்' என்று எழுதி ஒட்டியிருக்கிறதே!"— இது சாந்தாவின் பதில்.

"நான் ஒரு டாபிக்கும் 'ஓமிட்' பண்ணாமல் படித்தேன். ஆகையால் சரியான 'ஆன்ஸர்' எழுதினேன். இதில் என்ன அதிசயம் இருக்கிறது?"— சுசீலாவின் இந்த பதிலில் ஏளனம் கலந்திருந்தது. அவள் கடைக் கண்ணால் பாஸ்கரனைப் பார்த்தாள்.

"ஹூம், இந்தத் தடவையும் 'க்ளாஸ்' உனக்குத்தான்" என்று பெருமூச்சுவிட்டாள் ஹேமலதா.

"அதனால் தான் நம்ப 'வில்லையும்'

அவளே கொடுக்கிறேன் என்கிருள்'' என்ருள் சாந்தா சிரித்துக்கொண்டே. மேற்படி சம்பாஷணையைக்கேட்டுக்கொண்டிருந்த பாஸ்கரனின்மனம்அவமானத்தால்வெடித்துவிடும் போலிருந்தது. தான் படித்தமுறையே தவறு என்றல்லவா குத்திக் காண்பிக்கிருள் இந்த கர்வம் பிடித்தவள். ஆனல் தன்னல் மட்டும் அவளைவிட அதிக மார்க் வாங்கி அவளைத் தோற்கடிக்க முடியவில்லையே! இவ்வாறெல்லாம் அவன் எண்ணிப் புழுங்கினன்.

கடந்த இரண்டு பரீட்சைகளிலும் சுசீலாதான் வகுப்பில் முதன்மை பெற்று விளங்கினள். இது மாணவர்களுக்கு பெருத்த அவமானமாகவே இருந்துவந்தது. அவளுக்கு அடுத்தபடி அதிக மார்க் வாங்குபவன் பாஸ்கரன்தான் ஆகையால் பாஸ்கரனுக்கும்-சுசீலாவிற்கும் இப்படி ஒரு போட்டி ஏற்பட்டது ஆச்சர்யமில்லை. மற்ற மாணவர்களும் பாஸ்கரனை இந்த விஷயத்தில் உற்சாகப் படுத்தினர். ஆனல் இன்று பாஸ்கரனின் நம்பிக்கையே ஆட்டங்கண்டுவிட்டது. மத்யான பரீட்சையில் அவன் தனது திறமையை காண்பித்தாக வேண்டும்.

மத்யான பரீட்சை வழக்கம்போல் இரண்டுமணிக்கு ஆரம்பித்தது. பாஸ்கரன் காலையில் இருந்தது போலவே இந்தப் பரீட்சையும் இருந்து விடப்போகிறதே என்று தவித்துக் கொண்டிருந்தான். ஆனல் சுசீலா முகத்தில் புன் முறுவல் தவழ்ந்தது. கேள்வித்தாள்கள் வழங்கப்பட்டன. சுசீலா கேள்வித்தாளை வாங்கியவுடனேயே பதில் எழுத ஆரம்பித்து விட்டாள் அவள்கை வேகமாக ஓடியது பாஸ்கரன் யோசித்தப்பிறகு நிதானமாக எழுத ஆரம்பித்தான் மேற்பார்வையாளரின் கால் பூட்ஸின் 'டக், டக்' என்ற ஒசையைத் தவிர எங்கும் ஒரே அமைதி.

"ஸார் என்ற தீனமானக் குரல் அமைதியைக் கிழித்துக் கொண்டு வெளி வந்தது.

சுசீலா தன் இடத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் மேற்பார்வையாளரிடம் தொடர்ந்து சொன்னள். "......எழுதிக் கொண்டிருந்த போது என் பேனு 'நிப்' உடைந்து விட்டது ஸார்...... கையில் பேனு இல்லை ......இன்னும் நிறையக் கேள்விகள் இருக்கின்றன...... நடுங்கும் அவள் குரலில் வருத்தம் கலந்திருந்தது.

மேற்பார்வையாளர் பக்கத்திலுள்ளவரிடம் பேனு இருந்தால் வாங்கிக் கொள்ளும்படி சொல்லி விட்டுத் தன் வேலையில் ஈடுபடலானர். சுசீலாவிற்கு தன் சினேகிதிகள் ஒருவரிடமாவது இரண்டு பேனுக்கள் இல்லை என்பது தெரியும். அவள் தன் பின்னல் அமர்ந்திருந்த பாஸ்கரனைப் பரிதாபமாகப் பார்த்தாள். பாஸ்கரன் இரண்டு பேனுக்கள் கொண்டு வரும் வழக்கத்தைக் கல்லூரி வந்தும் இன்னும் கைவிட வில்லை! அவன் பேனுவை எடுத்துக் கொடுக்கப் போகும் தறுவாயில், அவன் மனதில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. "பேனுவைத் தந்து நாம் ஏன் அவளுக்கு உதவ வேண்டும்? அவள் கர்வம் அடங்க பேனுவைக் கொடுக்காமல் இருந்து விட்டால் என்ன?''....... ஆனல் ஒரு நிமிஷம் தான் இந்தத் தயக்கம். அவன் பேனுவைக் கொடுத்து விட்டான.

*　　*　　*

கோடை விடுமுறை கழிந்து எல்லா மாணவ, மாணவிகளும் மறுபடியும் ஒன்று சேர்ந்தனர். பாஸ்கரனும் அவன் நண்பர்களும் பரீட்சை 'முடிவைக்காண ஆவலோடு 'நோட்டீஸ் போர்டைப்' பார்த்தனர். பார்த்தவர்கள் திகைத்து நின்றனா. பாஸ்கரன் தான் முதல் மார்க் வாங்கி இருந்தான். 'அன்று பேனு கொடுத்து உதவிய நன்றிக்காக சுசீலாதான் விட்டுக் கொடுத்து விட்டாள்' என்று பெண்களிடையே பேச்சு எழும்பியது. இந்த அவமானத்தை பாஸ்கரனல் பொறுக்க முடியவில்லை தனக்காக ஒரு பெண் விட்டுக் கொடுப்பதா? பாஸ்கரனுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை.

கடற்கரையில் கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்த பாஸ்கரன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அவன் சுசீலாவை —அந்த கர்வம் பிடித்தவளை—மறந்து விடத்தான் நினைத்தான். ஆனல் அன்று பேனுவை அவளிடம் கொடுக்கும் பொழுது ஏற்பட்ட ஸ்பரிச உணர்ச்சியை அவன் கனவிலும் மறக்க முடியுமா? இந்தக் குழப்பத்திற்கிடையில் தந்தை நேற்று அவனிடம் கூறிய சொற்

கள் நினைவிற்கு வந்தன. "டேய் அடுத்த வாரம் பெண் பார்க்க மதுராந்தகத்திற்குச் செல்ல வேண்டும் இப்பொழுதே உன்னை அதற்குத் தயார் செய்து கொள். பிறகு கிளம்பும் பொழுது நொண்டிச் சாக்குச் சொல்லக் கூடாது. இடம், மிகவும் கௌரவ முள்ள இடம்'' தன் தந்தை சொன்னதைச் செயலில் செய்து விடுவார் என்று அவனுக் குத் தெரியும். பெண்ணின் தகப்பனார் பெயர் சங்கரய்யர் என்று தெரிந்து கொண்டான். பெண்ணைப் பற்றி அவன் தெரிந்து கொள்ள விரும்பவில்லை.

"நீங்கள் இங்குதான் இருக்கிறீர்களா? எங்கெல்லாம் தேடுவது?" என்ற இனிமை யானக் குரல் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பி னான் பாஸ்கரன். ஆம்! சுசீலாதான் நின்று கொண்டிருந்தாள்.

"பேனா உங்களுக்கு வேண்டாம் போலி ருக்கிறது! இந்தாருங்கள். நல்ல வேளை! ஊரு க்குப் போகுமுன் உங்களைச் சந்திக்க முடிந் ததே!".

'என்ன, என்ன? ஊருக்கா? எதற்கு?

"என்னை யாரோ பார்க்க வருகிறார்க ளாம்! நான் போய் அப்பாவிடம் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிவிடப் போகி றேன்......நீங்கள்........அன்று பேனாவைக் கொடுத்த பிறகு எனக்குப் பரீட்சையே எழுத ஓடவில்லை. கையில் ஒரு நடுக்கம்!"

"அப்படியென்றால் எனக்காக நீ விட் டுக் கொடுக்கவில்லை என்று சொல்லு! உட் காரேன்!"

சுசீலா அவன் முன்னால் அமர்ந்து கொண்டாள். அவள் முகத்தில் வருத்தத் தின் சாயல் தெரிந்தது.

"ஆமா! எந்த ஊர் போவதாகச் சொன்னாய்?"— பாஸ்கரன் தான் கேட்டான்.

"மதுராந்தகத்திற்கு"

"என்ன? மதுராந்தகத்திற்கா? அப்படி யென்றால் உன் தந்தை பெயர் சங்கரய்யரா?— பாஸ்கரன் பதற்றத்துடன் கேள்விகளை அடுக்கினான்

"ஆமாம்! உங்களுக்கு எப்படித் தெரியும்? என்றாள் சுசீலா வியப்புடன்.

பாஸ்கரன் எல்லா விஷயத்தையும் அவளிடம் சொன்னான். இருவரும் "நல்ல வேடிக்கை!" என்று சொல்லிச் சிரித்தனர்.

கடைசியாக பாஸ்கரன், "சுசீ, ரொம்ப தாங்க்ஸ்" என்றான்.

"யாருக்கு?"

"உன் உடைந்த பேனாவிற்குத்தான்!" இருவரும் கல, கல வென்று சிரித்தனர்.




பெல்ஜியம் கண்ணாடிகளால் தயாரித்த

பூஜைக்குரிய கடவுள் திருவுருவப்படங் கள், போற்றுதற்குரிய தேசத் தலைவர் கள், திருத்தணி சுப்ரமணியர் உற்சவர் மூலவர் படங்கள் மற்றும் சிறந்த முறையில்

படங்களுக்கு

பிரேம்போட சிறந்த இடம்

K. V. கணபதி,
நியூபஜார் ரோட்
திருத்தணி.

# "பண்ணையார்"

[தொடர் நாடகம்]

அங்கம் 3

இடம்: சோழபுரத்திலுள்ள கிராம பொது நிலையம்.

நேரம்: காலை.

உறுப்பினர்கள்: நாட்டாண்மைக்காரர் முனியன், காத்தான், மாரி.

நிலைமை:

[வங்கக்கடலிலே ஆரம்பித்த சுழிக்காற்று புயலாக உருவெடுத்தது. கடறகரையை அடுத்த தஞ்சை மாவட்டத்தில் பலபகுதிகள் புயலின்கொடுமையால் பாழாக்கப் பட்டன. தென்னை, மா, பலா தோப்புகளும், சாலை ஓரங்களில் பருத்து வளர்ந்து போவோர், வருவோர்க்கெல்லாம் நிழலளித்தும் பசித்தோருக்கு புசிப்பதற்கு காய் கனிகள் அளித்து வந்த பல மரங்களும், வேருடன் சாய்ந்து சின்னு பின்னமாக்கப் பட்டிருந்தன. சுருங்கக் கூறின் அசோகவனத்தை அனுமான் அழித்ததைப் போன்று சோழநாட்டின் பல பகுதிகள் நாசமாயின. வீடிழந்து, பொருளிழந்து கால்நடைகளையிழந்து கதறலாயினர் எண்ணற்ற மக்கள்]

நா: "டேய் முனியா! காத்தான், மாரி, ஓடியாங்கடா! நம்ம சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு மேல்புரம் குடிசையில் யிருந்தாரே கிழவன் அவரு செத்துப்போயிட்டாருடா!"

முனி, காத்: [இருவரும்] என்னங்க! நேத்து சந்தையிலே பார்த்தோம்களே! சாமான் வாங்கிட்டு வந்தாருங்க. எப்படிங்க செத்தாரு?

நா: எமன் 'புயல்' ரூபத்திலே வந்து விட்டான். ராத்திரி புயல் அடிச்சுது பாருடா? அதிலே கீழண்டபுரம் சுவர் கிழவர்மேல் விழுந்து விட்டது.

காத்: ஐயோ! பாவம்....... தள்ளாத வயதிலே பொல்லாத காலம் வந்ததுங்கோ!

முனி: இரண்டுபேரப்பிள்ளைகள் இருந்ததுங்களே!

நா: ஆமாம் யிருக்கு! இனி அந்தக் குழந்தைங்க கதி என்னவாகுமோ? ஈசன் தான் அறிவர்.

மாரி: என்னு செய்யரதுங்கோ, ராத்திரி அடிச்ச 'புயல்' ரொம்ப பேரை பலிவாங்கி விட்டுதுங்களே.

[ஊரிலுள்ள – முத்தண்ணு – சாமா அய்யர்.]

முத்தண்: என்னவோய்! சாமா? நோக்கு தெரியுமோன்னே?

சாமா: என்ன முத்தண்ணு?

முத்தண்: "கிழவன் கண்ணுசாமிபிள்ளை யில்லே."

சாமா: "என்ன அப்படிக் கேட்டேள்! தெரியாம என்ன! பொழுது விடிந்ததும் விடியாததுமா, சுப்பிரமணிய சுவாமி கோவிலிலே அவனை பார்க்கலாமே!"

முத்தண்: ஆமாம்! ஆமாம்! அந்தக் கிழவன்தான் காணும்.

சாமா: அவனுக்கு என்ன?

முத்தண்: அவன் செத்துபோயிட்டாள்.

தில்லையாடி, ந. சண்முகம்.

சாமா: எப்படிச்செத்தான். நேற்று முன் தினம் பார்த்தேனே! நல்லாத்தானே இருந் தாங்கானும்.

முத்தண்: ராத்திரி அடிச்சுதுல்லியோ, புயல் அதிலே வீடு விழுந்து செத்துட்டான்

சாமா: இரண்டு பேரப்பிள்ளைகள் இருந் ததே வோய்! இனி அந்த குழந்தைகள் என்ன வாகிறது.

முத்தண்: என்ன வோய், அது அதன், விதி படித்தான் நடக்கும்.

(இவர்கள் போகிறார்கள்.)

[சோமசுந்தரம் பிள்ளை – மாணிக்கமுதலியார்]

பிள்ளை: என்ன முதலியார்வாள் இராத் திரி அடித்த 'புயல்' ஊரையெல்லாம் ஒரே யடியாய் பாழ்பண்ணி விட்டதே.

முதலியார்: அதோடவா? விளையாட்டுச் சாமான் செய்து விற்பானே கிழவன் கண்ணு சாமி பிள்ளை அந்தக் கிழவனும், புயலுக்குப் பலியாகிவிட்டான்.

பிள்ளை: அதுசரி!... அந்தப் பிள்ளைகள்.

முதலியார்: அதுகளு? "விடியாமூஞ்சுகள்" பிறக்கும் பொழுதே, அப்பன் எங்கோ இரங் கூனுக்குப் போய் செத்துட்டானும். பிறகு இந்தப் பெண் கண்ணம்மா போயிடுத்து. அதான் போச்சே! இந்தக் கிழவன் இன்னம் கொஞ்ச நாள் இருக்கக்கூடாது.

பிள்ளை: குழந்தைகள் என்னப்பா செய்யும்

முதலியார்: என்ன செய்யும்? இனி எங் காவது பிச்சை எடுக்கவேண்டியதுதான்.

(இவர்கள் போகிறார்கள்)

["சோறுடைத்த சோழநாட்டிலே சோற்றுக் குப் பஞ்சம்'' வளம் கொண்ட வண்டமிழ் நாட்டிலே வறுமை தாண்டவ மாடிற்று. சோழ மன்னனின் பெயரைத் தாங்கிய, சோழபுரத்தில் எத்தனையோ நிலப்பிரபுக்களும், நாட்டாபிமானி களும், சமுதாயம், சகோதரத்துவம் பேசும் பொதுவுடமை வாதிகளும், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற உயரிய கருத்துக்களை உதடு கிழிய கத்தும் உத்தமர்களும், ஊரில் இருக்கத்தான் இருந்தார்கள். ஆனால் ஒருவராவது அந்தக்குடிக்கு சென்று அந்த நாதியற்ற குழந்தைகளுக்கு ஆறு தல் சொல்ல வில்லை]

நாட்டாண்: டேய் காத்தான், முனியா கிழவரை தூக்குங்கடா! 'பாவம்' இந்த பிள்ளைகளுக்காகத்தாண்டா இவரு இத்தனை காலமும். இந்த ஊர்லே யிருந்தாரு. பேரக் குழந்தைகளை எப்படி எப்படியோ வளர்க்கவேண்டும் என்று ஆசைபட்டாரு தெரியுமா? என்கிட்டே கூட, மனம்விட்டு ஒரு நாள் பேசிக்கிட்டிருந்தாரு.

காத்: என்னுங்க எஜமான்! "எண்ணிய படி எதுதான் நடக்குதுங்கோ''

முனி: கிழவர் மனதிலே நினைச்சாரு. இப்ப! அவருடைய எண்ணமெல்லாம் இடிந்து மண்ணோடு மண்ணாய் போச்சு துங்களே!

[நாட்டாண்மைக்காரர் முயற்சியால் கிழவ ரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அந்தக் குழந்தைகளையும் தன்வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார்.]


உங்கள் விசேஷ தினங்களுக்கு
சிறந்த ஒளி & ஒலி பெருக்கி
அமைப்பாளர்
மூர்த்தி ரேடியோஸ்
பெரிய கடைத்தெரு :: அம்மாபேட்டை,
தஞ்சை.
Pro: P. M. G. C.

அங்கம் 4.

இடம்: நாட்டாண்மைகாரர் வீடு.

நேரம்: மாலே.

(நாட்டாண்மைகாரரும் அவர் மனேவி தங்கமும்)

நாட்டான்: தங்கம், தங்கம்.

தங்கம்: என்னுங்க.

நாட்டான்: இந்தப்பிள்ளேகளே அழைத்து போய் சாப்பாடுபோடு.

தங்கம்: (முனுமுனுத்த படியே) சரி தானுங்க.

நாட்டான் அமுதா, உன் தம்பியை அழைச்சிக்கிட்டுப் போய் சாப்பிடு.

(அமுதா 'கோ' வென கதறி அழுகிருள் தாத்தா எங்களே விட்டு எங்கே போனே தாத்தா" என்று கதறுகிருள்)

நாட்டான்: அழாதே! அமுதா! தாத்தா செத்துப்போயிட்டாரு இனி வரவாப்போருரு நீ போய் சாப்பிட்டுவிட்டு தூங்கு.

[அமுதாவும் – சுந்தரனேயும் பார்த்து நாட்டாண்மைகாரர் மனேவி தங்கம் "விடியா மூஞ்சுகள், வேலேயற்றதுகள் தரித்திரங்கள்" என்று திட்டுகிருள். நாட்டாண்மை காரரின் நல்ல மணதிற்கு எதிர்மாருக தங்கம் இருந்தாள். பெயர் மட்டும் தங்கமாக இருந்ததேதவிர செய்கை நடத்தை எல்லாம கொடுமையாகவே இருந்தது. என்ன செய்யலாம் நம் நாட்டிலே கணக்கற்ற குடும்பத்தில் இந்தக் காட்சியை கணகூடாகபார்த்து வருகின்ருேம். அமுதாவிற்கும் சுந்தரனுக்கும் தங்கத்தின் குணம் பிடிக்கவில்லே. அவர்கள் என்ன செய்வார்கள், தங்கம் போட்ட 'அளவு' சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு திண்ணேயில் தூங்கிஞர்கள். சிறுபிள்ளேகளாக இருந்தாலும் அவர்களுக்கு தூக்கம் வரவில்லே. புரண்டார்கள் அழுதார்கள்.]

*　　*　　*

அங்கம்: 5.

இடம்: நாட்டாண்மைகாரர் வீடு.

நேரம்: காலே.

நாட்டாண்: தங்கம் அந்தப் பிள்ளேகள் எங்கே?

தங்கம்: எங்கே போச்சோ தரித்திரங்கள். "நல்லது ஒருக்குமா இந்த நாய்களுக்கு."

நாட்டாண்: என்ன தங்கம் இப்படி சொல்ரே, அந்த பிள்ளேகள் என்ன செய்யும் பாவம்,

தங்கம்: சரிங்க உங்கவேலேயைப் போய் பாருங்க.

நாட்டாண்: பாவம்! அது அதன் தலே விதிப்படித்தான் நடக்கும்.

(அமுதாவும் சுந்தரனும் நடந்து போகிருர்கள் வழியில் போவோர் வருவோரைப் பார்த்து ஏதாவது உதவி செய்யும்படி கெஞ்சுகிருர்கள்)

அமுதா: ஐயா! ஐயா! ஏதாவது உதவி செய்யுங்க பசிக்குது ஐயா.

வழிபோக்கன்: சீ! சீ! போங்க. உங்களுக்கு வேறே வேலே இல்லே.

மற்ருெருவர்: என்னசார்! இந்த தொந்தரவு எங்கேபார்த்தாலும் பெருத்து போச்சு.

**1 ஆசாமி:** ஆமாம், ஆமாம்! பெரியவர்கள் சின்ன பிள்ளைகளை இப்படி தயார் செய்து விடுகிறார்கள் சார்.

**2 ஆசாமி:** என்ன செய்யரது சார். நம்ம நாடு அந்த சூழ்நிலையில்தானே இருக்கிறது.

[இவர்கள் போகின்றார்கள். என்ன செய்வது? மனம் உள்ளவருக்கு பொருள் இல்லை. பொருள் உள்ளவர்களிடம் மனம் இல்லை இவர்களிடம் அமுதா கெஞ்சுகிறாள்]

**அமுதா:** ஐயா, பசி பொறுக்கமுடியலை ஏதாவது காசு கொடுங்க ஐயா!

**1 ஆசாமி:** (நண்பரை பார்த்து) ஏம்பா ஏதாவது காசு—கீசு வைச்சிருக்கியா?

**2 ஆசாமி:** (தன் பாக்கெட்டை தடவிய படி) ஒண்ணுமில்லேப்பா நாலணா இருக்கு.

**1 ஆசாமி:** பாப்பா! இங்கேவா

**2 ஆசாமி:** ஏன்பாப்பா! நீயாரு? உனக்கு யாருமில்லே, ஏன் இந்த சிறுவயதில் பிச்சை எடுக்கிறீர்கள்.

**அமுதா:** எங்களுக்கு யாருமில்லிங்க தாத்தா இருந்தாரு அவரும் செத்து போயிட்டாருங்க.

**1-2 ஆசாமிகள்:** ச்சூ. ச்சூ. பாவம்.

**1 ஆசாமி:** இந்தா பாப்பா ஏதாவது வாங்கி சாப்பிடுங்கோ. (நாலணாவை நீட்டுகின்றார்)

**அமுதா:** ஐயா எங்களுக்கு ஏதாவது வேலைவாங்கி கொடுங்க ஐயா என்ன வேலையானாலும் செய்யரேனுங்க.

**2 ஆசாமி:** இந்த சின்ன வயதிலே நீங்க என்ன வேலை செய்யமுடியும்? எங்கேயாவது போய் பாருங்க

**1 ஆசாமி:** என்னப்பா! இந்த அனாதை குழந்தைகளை ஆதரிக்க யார் இந்த நாட்டில் இருக்கிறார்கள்-

**2 ஆசாமி:** நம்மிடம் பொருள் இல்லையே என்ன செய்யலாம் சிலரிடம் பணம் இருந்து என்னப்பா செய்யரது. நல்ல மனசு வேண்டும்.

(இவர்களும் போகிறார்கள் சுந்தரம் நடந்து வந்த களைப்பினால் நடக்க முடியாமல் அழுகின்றான்)

**சுந்தரம்:** கால் எல்லாம் வலிக்குது அக்கா. இனிமேல் என்னால் நடக்கமுடியாது.

**அமுதா:** சுந்தரம் மெதுவாக வா. அந்த ரயில்வே ஸ்டேஷனில் போய் ரயில் ஏறுவோம்.

**சுந்தரம்:** காசு இருக்கா.

**அமுதா:** சும்மா ஏறிப்போவோம் வா?

[என்ன நல்லவர்களாக இருந்தாலும் சந்தர்ப்ப சூழ் நிலையால் கெட்டவர்கள் ஆகிவிடுகின்றார்கள். இதற்கு இந்த குழந்தைகள்தான் என்ன விதி விலக்கா? சுந்தரனும், அமுதாவும் துணிந்து டிக்கட்டில்லாமல் ரயில் ஏறி விடுகின்றார்கள். ஒவ்வொரு வண்டியில் வரும் டிக்கட் பரிசோதகர்கள் அமுதாவையும்-சுந்தரனையும் மனம் நோகும்படி திட்டி விட்டு அந்தந்த ஸ்டேஷனில் இறக்கிவிடுவார்கள்]

அங்கம் 6.

இடம்: செங்கல்பட்டு ரயில் நிலையம்.

நேரம்: காலை

(அமுதா—சுந்தரன் டிக்கட் இன்ஸ்பெக்டர்)

**டிக்-கலெக்டர்:** ஏய்! கழுதைங்களா திருட்டுரயிலா ஏறிவர்ரீங்க. என்று கூறியபடியே (கண்ணத்தில் பளார், பளார், என அடிக்கின்றார்)

(தொடரும்.)

# திருவுருவ அமைப்பிலக்கணம்.

ஸ்தபதி. வை கணபதி, பி. ஏ.

இறைவனுக்கு இலக்கணம் கண்ட நாடு நம் நாடே. காரணங் கற்பனை கடந்த கருணை வடிவினனான இறைவனின் பேராற்றலையுணர்ந்த நம் முது பெரும் ஞானிகள் அவ்வாற்றலைப் பகுத்தும் அவனது திருவடிவினைத் திட்ட வட்டமாகக் கற்பித்துள்ளார்கள். மனிதன் தனது இறைவனை மகத்தான ஆற்றல் வாய்ந்த மனித உருவினனாகவன்றி வேறு நிலையில் கற்பிக்க இயலாதென்று விவேகானந்த சுவாமிகள் கூறியது போல இறைவன் திருவுருவத்தை மனிதச் சார்புடைய திருமேனியாகவே இயற்றியுள்ளார்கள் நமது நாட்டுச் சிற்பிகள். இத்தகைய மனித வேடம் தாங்கிய நிலையிலேயே இறைவனைக் கண்டு களித்ததாக திருஞானசம்பந்தரும், இராமகிருஷ்ண பரமஹம்சரும் கூறியிருப்பது இங்கு நினைவுறுத்திக் கொள்ளத்தக்கது.

பிறநாட்டுச் சிற்பிகளும் இறைவன் திருவடிவத்தினை மனித வடிவத்திலேயே அமைத்துள்ளார்கள். ஆனால் இரு திருவுருவங்களிடையே காணப்படும் வேறுபாடுகள் பல உண்டு. உதாரணமாக பிறநாட்டுத் தெய்வ உருவங்கள் மிகச் சிறந்த கலை நுணுக்கம் நிறைந்த—எழில் மிக்க—மனித உருவங்களாகவே காட்சி தருகின்றன. உள்ளதை உள்ளபடியே காட்டும்—இயற்கையின்—பிரதி உருவங்கள் (Realistic forms). இறைவன் சொலற்கரிய திறன் மிக்கோன்; பிறப்பிறப்பில்லாதான்; கற்பனை கடந்த கருணை வடிவினன். அகையினால் அவனை மனித நிலையினின்று மிக உயர்த்தி தத்துவ உருவினனாக (Idealistic form) நமது நாட்டுக் கலைஞர்கள் படைத்தருளினார்கள். தத்துவ வழியில் தோன்றிய காரணம் பற்றி நமது தெய்வத் திருமேனிகள் பல கரங்களையும் பல முகங்களையும் தாங்கி நிற்கின்றன. தெய்வத்திருவுருவங்களுக்கன்றி மனித உருவங்களுக்கு பல முகங்களையும் பல கரங்களையும் நமது சிற்பிகள் அமைக்கவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது.

இயற்கையை நகல் செய்யாது அதற்குள் புதைந்து கிடக்கும் பேருண்மையை உருவகப் படுத்தி யுணர்வதே நம் நாட்டுச் சிற்பக் கலையின் மரபு. இதுவே உண்மைக் கலை என்பர் அறிஞர்கள். மேலும் இயற்கைக்கு அணி செய்வதும் நமது கலைஞர்களின் நோக்கமாகும். இயற்கையில் எளிமையான உருவம் தாங்கிய 'வாத்து' என்ற பறவை சிற்பியின் கரங்களில் எழில் மிக்க-அணி பொருந்திய –அன்னமாகக் காட்சியளிப்பதொன்றே இக் கூற்றை மெய்பிக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இங்ஙனம், தத்துவ வடிவங்களையும் அணியேற்றிய பிற உருவங்களையும் கல்லிலும் செம்பிலும் வேறு பல பொருள்களிலும் அமைத்தற்குறிய விதிகளையும் இலக்கணங்களையும் விரித்துரைக்கும் நூல்களே சிற்ப சாஸ்திரங்கள் எனப்படும். சிற்ப நூல்களுள் படிம அளவை இலக்கணங்களை மிக நுணுக்கமாக எடுத்தாளும் நூல்கள் மானசாரம், காஸ்யபம், மனுசாரம், சிற்பரெத்தினம், விஸ்வகர்மியம் முதலியனவே. இவை நமது தமிழ் நாட்டுச் சிற்பிகளுக்கு நன்கு அறிமுகமானதும் வழக்காற்றில் இருந்து வருவனவுமாகும். இந்நூல்கள் கூறும் இலக்கண வரம்பிற்குள் எழுந்த உருவங்களே பல்லவ, சோழ, பாண்டிய சிற்ப வடிவங்கள்.

ஆனால் தமிழ் நாட்டுச் சிற்பிகளில் ஒரு சிலருக்கே தெரிந்த சிற்ப நூல்களும் உண்டு. அவற்றில் ஆத்ரேய திலகம் என்பது ஒன்று. இதன் ஒரு பகுதியை நேபாள அரசு விஸ்வ பாரதி பல்கலைக் கழகத்திற்கு

அன்பளிப்பாகக் கொடுத்தது. இதனை எல்லோரும் படித்துப் பெரும் பயன் எய்தும் பொருட்டு ஆசிரியர் பனீந்திரநாத் போஸ் அவர்கள் 'பிரதிமாமான லக்ஷணம்' என்ற பெயரில் அவ்வடமொழி நூலை சுமார் 30 வருடங்களுக்கு முன்பு வெளியிட்டிருந்தார்கள் அதன் பிரதிகள் இப்போது கிடைப்பதில்லை. அதனைத் தமிழில் மொழி பெயர்த்து 'சிற்பி' மூலம் பரப்பினால் சிற்ப உலகத்திற்குப் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையில் இவ்விதழில் இடம் பெறச் செய்யப்பட்டுள்ளது. அந்நூலின் கண் திரு. போஸ் அவர்கள் எழுப்பியிருக்கும் ஐயங்களையும், பாடபேதங்களையும் பிற நூல் கொண்டு சரி பார்த்தும், அந்நூலின் கோட்பாடுகளுக்கும் செய்திகளுக்கும் முறண்பாடு—இடையூறு—ஏற்படாதவண்ணம் தமிழாக்கப் பட்டிருக்கிறது.

தெய்வத்திருவுருவங்களின் வெவ்வேறு உறுப்புக்களின் பெயர்களைக்கூறி, அந்தந்த உறுப்புக்களின் அளவுகளை மிக நுணுக்கத்துடன் எடுத்துரைப்பதோடு அவ்வவற்றின் புறத்தோற்றம் இயற்கைப் பொருள்களில் எவ்வெவற்றை ஒத்திருக்கின்றன என்பதை விளக்கமெனத் தருவது இந்நூலின் சிறப்பியல்பாகும்.

எல்லாம்வல்ல இறைவனை வணங்கி தெய்வத் திருவுருவ அளவை இலக்கணங்களை ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

## அளவைகள்.

பன்னிரெண்டு விரல் அளவு கொண்டது 'தாலம்' அல்லது 'விதஸ்தி' அல்லது 'முகம்' என்றும்; இரண்டு விரலளவு கொண்டது ஒரே பொருளுடைத்தான 'கோலகம்' அல்லது 'கலை' என்றும் (சிற்பி) அறிதல் வேண்டும்.

அங்கையின் நான்கிலொரு கூறு 'மாபனங்குலம்' என்றும் ஒரங்குலத்தின் (விரலின்) எட்டிலொரு கூறு 'யவை' என்றும் வல்லுநர் அறிதல் வேண்டும்.

படிமங்களின் அங்க-பிரதி அங்கங்களை அளவிடுதற் பொருட்டு இங்ஙனம் கூறப்படுவதைக் கருத்திற் கொள்ளல் வேண்டும். இவ்விதிகட்கேற்ப அறிஞனை சிற்பி படிமங்களை அளத்தல் வேண்டும்.

## முகம் - அளவுகளும் இலக்கணங்களும்.

உடலின் நீளத்தை (படிமத்தின் மொத்த உயரத்தை) ஒன்பது கூறுகளாகப் பிரித்து முகத்தை ஒரு தால அளவு நீளம் உள்ளதாகவும் அவ்வளவு அகலம் உள்ளதாகவும் செய்தல் வேண்டும்.

'வ, வடிவம், மாங்காய் வடிவம் கோழி முட்டையின் வடிவம், எள்ளின் வடிவம் முதலிய வடிவங்களில் முகம் அமைதல் வேண்டும். (அகலத்தில்) ஒன்றரையங்குலம் குறையின் அஃது 'வ' வடிவத்தினைப் பெறுகின்றது.

இரண்டங்குலங் குறையின் முகமானது மாங்காய் வடிவத்தினைப் பெறும். இரண்டரையங்குலங் குறையின் அது முட்டை வடிவினைப் பெறுகின்றது.

மூன்றங்குலம் குறையின் (அம்முகம்) எள்ளின் வடிவத்தைப் பெறுகின்றது. இந்நான்கு வகையான முகங்களில் கபாலத்தைக் கணக்கிலிருந்து நீக்கிவிடல் வேண்டும்.

எள்ளின் வடிவமே பெண்-முகங்களுக்கு ஏற்புடைத்தாகும். சாத்திர விதிகட்கு மாறாக முகம் செய்யப்படின் தலைவன் (செய்விப்போன்) அழிவை அடைவான்.

இவ் விலக்கணங்களுக்கிணங்க முகத்தினை அமைத்தால் அத்தலைவன் உறவினர்களுடன் கூடிச் செழித்து வாழ்வான். இங்ஙனம் சாத்திர அறிவைப் பெற்றபின்னரே சிற்பியானவன் திருவுருவங்களை அமைத்தல் வேண்டும்.

(தொடரும்.)

# பஸ், லாரி பாடிசெய்யும்

சாமன்கள் சம்பந்தமான தேவைகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்

-: R. K. S. பதி, :-

Prop:- உமாபதி அண்கோ.,

27, சாமிப்பண்டாரம் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை :: சென்னை -2.



# குஷ்டரோகத்திற்கு



## அம்பலூர் உயர்தர மருந்து.

**உலகத்தில் முதன்மைபெற்ற மேக குஷ்டரோக நிவாரணி மேகநோயால் துன்பப்படுவேருக்கு புத்துயிரளிக்கும் புனித சஞ்சீவி.**

**கடுமையான பத்தியமில்லை.**

இவற்ருல் நிவர்த்தியாகும் வியாதிகளாவன:-

குஷ்டம், கருமேக, செம்மேகப்படைகள், மேகரணங்கள், திமிர் மதமதப்பு, கை கால் குடைச்சல், பித்தகாரிகம் முதலிய 21 மேக சம்பந்த ரோகங்களும், 18 குஷ்ட்டங்களுக்கும், சூலை 18, வாதம் 80, குன்மம் 8, மேக வாய்வு பித்த வாய்வு உஷ்ண வாய்வு முதலியதும் ஸ்திரீ சம்பந்தமான வெள்ளை வெட்டை முதலிய சகல வியாதிகளும் நீங்கும் நிகரற்ற தாது புஷ்டியும் தரும், ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

**40** நாள் மருந்து ரூ. **9—0—0**: தபால் சிலவு ரூ. **1—8—0.**

எனது விலாசம்:- A. ரத்தினுச்சாரி,

நேட்டிவ் டாக்டர் – குஷ்டரோக வைத்தியசாலை,

அம்பலூர் போஸ்டு

(Via) வாணியம்பாடி. N.A.Dt.

# புரிவீர் நன்றி!

( வி. சுப்பிரமணியம், எம். ஏ. )

நமைப்பல்லோர் தாடிடுவார் நன்மை பெற்று
நழுவிடுவார் ஒருபொழுதும் நன்றி கூறுர்

சுமைப்பலவும் தாம்சுமக்கச் சுயந லத்தார்
சுகம்பெறுவார் ஒருபொழுதும் நன்றி பாரார்

இமைப்பொழுதும் சுயநலத்தே கருத்து வைத்தோர்
இனிமையுடன் வாழ்ந்திடினும் இருளே காண்பார்

அமைப்பாகப் பிறருதவி யடைந்த பின்னர்
அனுவளவும் மறந்திடாமற் புரிவீர் நன்றி!


தங்களுக்குத் தேவையான பிளாக்கு வேலைகளுக்கும்,
அச்சு வேலைகளுக்கும் சிறந்த இடம்


## தண்டபாணி பிரஸ்

304. ராஜ வீதி :: கோயமுத்தூர்.

உரிமையாளர்:-

P. மருதாசல ஆச்சாரி.

GAMAKA HARMONIUM.
Manufacturing Co,
Mount Road, Teynampet,
MADRAS - 18.



33-வருட ஆராய்ச்சியின் பயனாக

கமக ஆர்மோனியம்
சுதிப் பெட்டிகள்

மகரயாழ், சகோடயாழ்,
வீணை தம்பூரா பிடில்
கோட்டு வாத்தியம்.

முதலிய சங்கீதக் கருவிகள் தயார்செய்தும் பழையவற்றை பழுது பார்த்தும் கொடுத்து வருகிறோம்.

பிரபல பெரிய சங்கீத வித்வான்களின் நற்சாட்சிப் பத்திரங்கள் ஏராளமாக பெற்றுள்ளோம்.

மதுரை
N. பொன்னையா,
கமக ஆர்மோனியக் கம்பெனி,
நெ. 90 மவுண்ட் ரோடு,
தேனாம்பேட்டை, சென்னை–18.

## சிலப்பதிகார விளக்கம்:-

ஆடைகள் செய்யும், தொழிலே யன்றியும் அக்காலத்தில் மற்றைய கைத் தொழில்களும் மேம்பாடடைந்திருந்தன என்று தெரிகின்றது. காவிரிப்பூம் பட்டினத்தில் வெண்கலத்தில் வேலை செய்யும் கன்னாரும், செம்பில் வேலை செய்யும் கன்னாரும், மரத்தில் வேலை செய்யும் தச்சரும் இரும்பில் வேலை செய்யும் கொல்லரும், அழகிய சித்திரம் எழுதும் ஓவியப் புலவரும், சிற்ப வேலையில் வல்லாரும் பொன்னாலும், மணியாலும் வேலை செய்யும் தட்டாரும் தையல் வேலையில் வல்லோரும் வாழ்ந்துவந்தார்கள். என்று சிலப்பதிகாரத்தால் அறிகின்றோம். இன்னும் அழகிய வளையல்கள் செய்வாரும், முத்து மாலைகள் செய்வாரும், கிழிந்த துணியால் விளையாட்டுச் சாமான்கள் (பொம்மை) செய்வாரும் புகார் நகரத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

— ரா. பி. சேதுபிள்ளை.

# சிலப்பதிகாரத்தில் சாதித்துவேஷம்?

தமிழ் இலக்கியத்தின் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லன் தமது திருட்டை மறைக்க-கோவலன் மீது பழி சுமத்தி அவனைக் கொலை செய்யத் தூண்டினான். ஆதலால் பொற்கொல்லர்களை மிகவும் தீயவர்கள் என்று பள்ளிப் பாடங்களில் கூறப்படுவதோடு பண்டிதர்களும் இவ்வாறே பிரசாரம் செய்து வருகிறார்கள். எனவே, பச்சிளஞ் சிறுவர்கள் உள்ளத்தில் பொன் வினைஞர்களைப் பற்றித் தவறான உணர்ச்சியை உண்டு பண்ணும் செயலைத் தடுத்தல் நமது கடமையாகும். இக்கடமையின் முதற்படியாக அந்நூலில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதை நடுநிலை நின்று ஆராய்வதும் அவசியமாகும்.

சிலப்பதிகாரத்தில் "கொலைக் களக் காதையில்"தான் பொற்கொல்லனை நமக்கு அறிமுகப் படுத்துகிறார் இளங்கோ அடிகள். ஏகாந்தியாக நலிந்த நடையுடன் காற்சிலம்பைக் கையிலேந்தி வரும் கோவலன்

"கண்ணுள் வினைஞர், கைவினை முற்றிய
நுண்வினைக்கொல்லர் நூற்றுவர் பின்வர
மெய்ப்பைபுக்கு விலங்குநடைச்செலவில்
கைக்கோற் கொல்லனைக் கண்டனன்"

என்று கவி கூறுகின்றார்.

அடியார்க்கு நல்லார் தம் உரையில் கூறுவது போல் ஒதுங்கி ஒதுங்கி அல்லது பதுங்கிப் பதுங்கி பொற்கொல்லன் வந்தான் என்று இங்கு கூறப்பட வில்லை. இராஜாங்க விருதுகளோடுள்ள அங்கியணிந்திருக்கிறான். அதோடு, அரண்மனைப் பணியாளன் எனக் காட்டும் கோலும் கையில் இருக்கின்றது. இத்தகைய இராஜவுடையணிந்த நுண்வினைக் கொல்லர் தலைவன் தமது சீடர்கள் அல்லது சிப்பந்திகள் நூற்றுவர் பின்வர அவர்கள் முன்னர் விலங்குகளின் அரசனாகிய சிங்கம் போன்று கம்பீரமாக நடந்து வருகின்றான். இவனைப் பின் தொடர்ந்து வருபவர்கள் சாதாரணத் தொழிலாளர்கள் அல்ல. சிறந்த கைத்திறன் மிக்க-சீரிய சிறப்பு வாய்ந்த நுண்வினைக் கொல்லர்கள். அணிகலன்கள் செய்வதில் திறமை மிகக் கொண்டவர்கள். எனவே, இவர்கள் தலைவன் பெருமையும் புகழும் சிறப்பும் கொண்டவன் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், இவனைக் கண்டவுடனேயே "தென்னவன் பெயரோடு சிறப்புப் பெற்ற பொன்வினைக் கொல்லன்" என உணர்கின்றான் கோவலன். அரசியின் சிலம்பு செப்பனிடுவதற்காக பொற்கொல்லனிடம் கிடைத்திருந்தால் அச்சிலம்பைத் திரும்பக் கொடுக்கக் கடைப்பட்டவன். அவனிடமிருந்து திருடு போயிருந்தாலும் அவனே அதற்குப் பொறுப்பு ஏற்றாக வேண்டும். ஆனால், கதை அவனிடம் சிலம்பு செப்பனிட வந்ததாகச் செப்பவில்லை. அவன் சிலம்பைத் திருடிக் கொண்டான்; அத்திருட்டு வெளிப்படு முன்னர்-கோவலனைத் திருடனாகப் பிடித்துக் கொடுத்துவிடப் விரும்பியதாகவே கூறுகிறது. ஆதலால், திருட்டு விஷயம் இன்னும் எவரும் தெரிந்துகொள்ளவில்லை என்பதை "கரந்தியான் கொண்ட காலணி, ஈங்குப் **பரந்து வெளிப்படா முன்னம்**" என்ற வார்த்தைகள் விளக்குகின்றன.

ஆனால், பொற்கொல்லன் அரசனிடம் சென்று அரசமாதேவியின் சிலம்பு கொண்ட கள்வன் தன் சிறு குடிலகத்து இருக்கின்றான் என்று கூறியபோது "ஈங்கென் தாழ் பூங்கோதை தன் காற்சிலம்பு கன்றிய கள்வன் கையதாகில் கொன்று அச்சிலம்பு கொணர்க" என்று உத்தரவிடுகின்றான். இதனால் அரசனுக்கு அரசியின் சிலம்பு களவு போன விபரம் ஏற்கெனவே தெரிந்துதான் இருந்தது என்பது புலனாகின்றது. அங்ஙனம் சிலம்பு களவு போனது தெரிந்திருந்தால் கட்டாயம் அதனைக் கண்டு பிடிக்க உத்தரவு போட்டேயிருப்பான். பொற்கொல்லன் பொய்த் தொழில் கொல்லன் என அரசனோ அல்லது அரசாங்க ஆணையாளர்களோ எண்ணியிருந்தால் நிச்சயமாக பொற்கொல்லனது திருட்டைக் கண்டு பிடித்து வெளிப்படுத்தியே இருப்பர்.

மேலும், ஒருவன் எவ்வளவுதான் இதர கவலைகளில் மனதைச் செலுத்தியிருந்தாலும் அத்தருணம் தம் நம்பிக்கைக்கு பாத்திரமல்லாத-தம்மால் சந்தேகிக்கப்படும் நபர் கூறுவதை ஆராயாது அப்படியே ஏற்றுக் கொள்ளும் வழக்கம் எங்குமே இல்லை. இதனை உளநூல் வல்லோர் அனைவரும் ஒப்புவர். எனவே 'சிலம்பு திருடிய கள்வன் எனது வீட்டில் இருக்கின்றான்' என்று கூறியதும் அவனைக் கொல்லுதற்கு எவ்வளவுதான வினை விளை காலமாக இருப்பினும் ஒரு அரசன்-அதிலும் நீதி நெறி வழுவாத மன்னன், கூறியிருப்பான் என்று கூறுவது அறிவிற்கு பொருத்தமாகாது. பொற்கொல்லன் கூறியதை நம்பி கள்வனைக் கொல்ல அரசன உத்திரவிடுவதிலிருந்து தமது அரண்மனை பொன்வினைஞன் மீது கொண்டுள்ள அரசனது நம்பிக்கையையும் அபிமானத்தையுமே காட்டுகின்றது.

இனி பொற்கொல்லன் நிலையைக் கவனிப்போம். முற்பிறப்பில் சங்கமன் என்ற ஆபரண வியாபாரியை, எவ்வித குற்றமும் அவன் செய்யாதிருக்க பரதன் என்ற தீத்தொழிலாளன் ஒற்றன் எனக் கூறி கொலை செய்யத் தூண்டினான். நிரபராதியான சங்கமனைக் கொல்ல சதி செய்த இப்பரதனே பின்னர் கோவலனாகப் பிறந்தான். ஆதலால் இவ்வூழ்வினை காரணமாக பொற்கொல்லன் கோவலனைத் திருடன் என்று எண்ணியிருக்கலாமல்லவா? மேலும் மாசுண்ட மேனியுடன் பரம தரித்திர நிலையில் கோவலன் தனியனாகப் பெரும் விலை மதிப்புள்ள "மத்தக மணியொடு வயிரங் கட்டிய சித்திரச் சிலம்பை" வைத்துள்ளான். அரசியின் சிலம்பு அத்தருணம் களவு போனதாகவும் எல்லோருக்கும் தெரிந்துளது. ஆதலால், அரசியின் சிலம்பே-கோவலன் கொண்டு வந்தது என்று எண்ணக் காரணமுண்டல்லவா? மேலும் வினை விளை காலமாதலின் அச்சிலம்பினை அவ்வாறு முடிவு செய்வதற்கு மேலும் காரணம் இருக்கிறது. ஆனல் "பொற்றொழில் கொல்லனை" "பொய்த்தொழில் கொல்லன்" என்று திருத்தி எழுதியவர்கள் 'மெய்ப்பைப்புக்கு விலங்கு நடைச் செலவில்' என்பதற்கு விலகி விலகி ஒளிந்து ஒளிந்து நடந்தனன் கீழ் மகன் ஆதலின்' என்று பொருள் கொண்ட பிரகஸ்பதிகள் பொற்றொழிலாளர் மீதுள்ள பகைமை காரணமாக ஏன் இப்பகுதியை திருத்தி எழுதியிருக்கலாகாது, என்று சிந்திக்க வேண்டுவது நடுநிலைமையாளர் கடன்.

இனி, ஒருவன் கொலை செய்தால் அக்குற்றவாளியைக் கொல்லுதலே நீதி. அறிவுடையோர் செயலுமாகும். ஆனல், அவன் குழந்தைகளையோ குடும்பத்தவர்களையோ இனத்தவர்களையோ கொல்லுவது நீதி என்றோ அவ்வாறு கொன்றதாகவோ நாம் எங்கும் கேட்டதில்லை. பொற்கொல்லன் குற்றவாளியேயாயின் அவனும் அவனது ஊரும் கண்ணகியின் சாபத்தால் தீக்கிரையாக்கப்பட்டது. இவ்வாறு கோபத்தால் தீரயோசியாது செய்த தவறு என்பதை கண்ணகியே தனது கணவனின் மகளாகிய மணிமேகலையிடம் ஒப்புக் கொள்ளுகிறாள்.

மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்தான் "மணிமேகலை" எனும் காப்பியத்தின் ஆசிரியர். அச்சாத்தனார் மதுரை வெள்ளியம்பலத்தில் படுத்துக் கிடந்தபோது மதுரைமா தெய்வம் கண்ணகி முன்தோன்றி கோவலனின் முற்பிறப்பு பற்றியும் அவன் செய்த தீவினையின் பயனாக இப்பிறப்பில் கொல்லப்பட்டான் என்று கூறியதையும் நேரில் கேட்டதாக இளங்கோவடிகளிடம் சொல்லியதாக சிலப்பதிகாரப் பதிகம் செப்புகின்றது. சாத்தனார் கூறியதையே அடிகளார் சிலப்பதிகாரமாக சமைத்துள்ளார். எனவே, சாத்தனாரின் கூற்று இன்னும் சரியானதென்று ஏற்றுக் கொள்ள ஏதுவிருக்கின்றது.

"உம்மை வினைவந்து ருத்தலொழியா தெனும்
மெய்ம்மைக் கிளவி விளர்பிய பின்னும்
சிற்றங்கொண்டு செழுநகர் சிதைத்தேன்
அவ்வினை இறுதியின் அடுசின பாவம்
எவ்வகை யானும் எய்துதல் ஒழியாது"

என்று வஞ்சிமா நகர் புக்க காதையில் வானுலகு சென்ற கண்ணகி கூறுவதாகப் படிக்கிறோம். மேலும் தமது பாபம் நீங்கும் வரை "பிறவிக்கடலிடை நீந்திப் பிறந்தும் இறந்தும் உழல்வோம்" என்றும் தவறை உணர்ந்து அதற்குரிய தண்டனை எதுவென்பதையும் தெரிந்த பத்தினித் தெய்வம் சினங்கொண்டிருந்தது, ஆதலால் பாண்டி

நாட்டில் மழைவளங் குன்றி வெப்பு நோயும் குருவும் தொடர்ந்தன. ஆதலால் ஆயிரம் பொற்கொல்லரை களபலி கொடுக்கவே மழை பெய்து நாடுசெழித்து நோயும் துன்பமும் நீங்கின என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுவது எவ்வாறு பொருந்தும்? நடுநிலையாளர்களே, ஆராய்ச்சியாளர்களே, பண்டிதர்களே பகுத்தறிவாளர்களே சிந்தியுங்கள் இது வேண்டுமென்றே பகைமையுணர்ச்சி கொண்டு பொன்வினைஞர்களை இழிவு படுத்த வேண்டுமென்று பிற்காலத்திலுள்ள சில சிற்றினத்தாரால் சேர்க்கப்பட்ட இடைசெருகல் என்பதற்கு ஏதேனும் சந்தேகமுண்டா?

ஒரு பொற்கொல்லன் செய்த தவறுக்காக பல்லாண்டு கட்குப் பின்னர் நிரபராதிகளான ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிடுதல் நீதியா? அவ்வாறு செய்ய வேண்டு மென்று தான் கண்ணகித் தெய்வம் கேட்டிருக்க முடியுமா?

கண்ணகி வானுலகு சென்ற பின்னர் அத்தெய்வத்திற்கு

**"குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின்**
**பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்"**

என்றே கூறப்படுகிறது. மேலும், இளங்கோவடிகள் சிலப்பதிகார இறுதியில் கூறும் நீதிகளிடையே **"ஊனூண் துறமின் உயிர் கொலை நீங்குமின்"** என்று கூறுவதால் உயிர்ப்பலி நடந்ததாக அவர் எழுதியிருக்கவே இடமில்லை.

எனவே "சிலப்பதிகாரம்" எனும் காப்பியத்தை இடைக்காலத்தில் கையாண்ட சில சிற்றறிவு படைத்த இன வெறியர்கள் பொன் வினைஞர்கள்மீது கொண்ட பொறாமையும் பகைமையும் காரணமாக இடைச்செருகலாகச் சிலபகுதிகளைப் புகுத்தியும் சிலவற்றைத் திருத்தியும் வெளியிட்டது என்பது உறுதி. இவ்விடைச் செருகல்களையும் திருத்தங்களையும் மாற்றி நேர்மையான பதிப்பு வெளியிடச் செய்யவேண்டுவது— வகுப்புணர்ச்சிகளை வேரறக்களைய விரும்பும் பெருமக்கள் கடமை என வற்புறுத்த விரும்புகிறேன்


## சிறந்த இன்னிசை விருந்தளிக்கும்

இளம் பாடகர் - ரேடியோ புகழ்

## திருச்சி S. V. கலியமூர்த்தி



திருச்சி S. V. கலியமூர்த்தி,
180 பெரியகம்மாளத்தெரு,
திருச்சிராப்பள்ளி.

சிறந்த இனாமல் வேலைகளுக்கு ஒப்புயர்வுற்ற இடம்.

## V. குப்புசாமி ஆச்சாரியார்,

299 பெரியகடைவீதி,
கோயமுத்தூர்–1.


குறிப்பு:- இக்கட்டுரை அன்பர் தி. ம. நடராசனர் சமீபத்தில் தஞ்சையிலும், மதுரையிலும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பெருக்குகளிலிருந்து திரட்டி வெளியிடப்பட்டது.



புது வைரங்களில் அசல் வைரம் போல்
பிரகாசிப்பது எமது

ரெங்கூன்

## அம்பிகா ஸ்டார்

வைரங்கள்.

மேலான

## மாஸ்டர்லீ வைரங்கள்

தயாரிப்பாளர்கள் :

**S. V. ருத்ராபதி & சன்ஸ்,**
ஜூவெல்லர்ஸ்,
சின்னகம்மாளத்தெரு, திருச்சி.

அழகிய ஆபரணங்களுக்கு மிகவும் ஏற்ற வைரங்கள்.

★ ★ ★



கியாரண்டி உள்ள
கல் பதித்த
தங்க நகைகள்.

தயாரிப்பாளர்:-

**S. மாணிக்கம் ஆச்சாரி,**
நகை வியாபாரம்,
No. 57 மேலக்காசிப்பாளையம்தெரு,
திருச்சிராப்பள்ளி.

**S. M. சீல் நகைகள் உத்திரவாதமுள்ளது.**

# "கல்தச்சு வேலப்பாச்சாரி"

( V. M. தங்கராஜன் கோவை. )

அவன் ஒருகல் வேலை செய்யும் கல் தச்சன். அவனை வேலப்பஆச்சாரி என்றுதான் எல்லோரும் கூப்பிடுவார்கள். கிட்டத்தட்ட அரை நூற்றுண்டிற்குமேல் வாழ்க்கை நடத்தி எத்தனையோ அனுபவங் களைப் பெற்றிருக்கிருன். அவனுக்கு ஒரே மகன்; ராமு என்பது அவன் பெயர் அவன் புதிதாக மணம் முடித்து மாமனர் வீட்டிற்கு மறுவீடு போயிருக்கிருன் இன்று இரவிற்குள் தனது மனைவியையும் அழைத்துக்கொண்டு வந்துவிடுவான் வாழ்க்கையிலே இன்றுதான் வேலப்ப ஆச்சாரியாரின் மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. அவனுடைய இருண்ட வீட்டில் இனி ஒளி வீசப்போகிறது!

கடந்த பலவருடங்களுக்குப் பிறகு வேலப்ப ஆச்சாரியின் சுருக்கம் விழுந்த முகத்தில் புன் சிரிப்பு தவழ்ந்தது. தனது குடிசையின் முன்னல் அமர்ந்து, மேலைத்திசையில் கதிர வன் அஸ்தமித்துக் கொண்டிருந்த காட்சி யைப்பார்த்துக் கொண்டிருந்தான். சமைப்பது முதல் வீட்டுக்காரியங்கள் அனைத்தையும் இது வரை தானே செய்யவேண்டியிருந்தது. இனி மேல் அந்தக்கவலை இல்லை; மருமகள் எல் லாவற்றையும் கவனித்துக் கொள்வாள். பெ ரும் பாரத்தை இறக்கிவைத்ததைப் போலிருந் தது வேலப்ப ஆச்சாரிக்கு ராமுவின் தாய் மட்டும் இன்று உயிரோடிருந்தால்...? பத்து வருடங்களுக்கு முன்னல் தன்னையும் ராமுவை யும் தவிக்கவிட்டு விட்டுப்போன மனைவியின் நினைவு வந்தவுடன் வேலப்ப ஆர்சாரியின் கண்கலங்கின. தன் பிள்ளையை மணக்கோலத் தோடு பார்க்க வேண்டும் என்று அவளுக்கு எத்தனை ஆசைத் தெரியுமா? உம்! அவள் அதற்கு கொடுத்து வைக்கவில்லை!

தன் மகனை நன்ருகப் படிக்க வைத்து உயர்ந்த உத்தியோகத்தில் சேர்க்கவேண்டும் எனறு அவனுக்கு கொள்ளை ஆசை. என்ன செய்வது! காலம் எண்ணத்திற்குத் தகுந்த போல் ஒத்துவரவில்லையே! தன் மனைவி போனபின் வேலப்ப ஆச்சாரிக்கு வாழ்க்கை யே வெறுத்துவிட்டது. பிரிவு ஏக்கம் நாள டைவில் தொழில் செய்ய முடியாத பலவீனத் தை அல்லவா ஏற்படுத்திவிட்டது? இன்று மகன் கொண்டுவரும் இருபத்தைந்து ரூபா யில் குடும்பம் நடத்த வேண்டி வந்ததை எண்ணீ அவன் வருத்தமடைவான். மகன் ராமு எங்கேயோ ஒரு ஆபீஸில் பியூன் வேலை பார்க்கிருன். உயர்ந்த சிற்பாச்சாரியார்களின பரம்பரையிலே பிறந்த தன்மகன் குற்றேவல் செய்யும் பியூனக வேலைசெய்வது கொஞ்சம் கூட பிடிக்கவில்லை வேலப்பாச்சாரிக்கு. இருந் தாலும் இந்த வேலையாவது ஒரு நிரந்தர வருமானம் வருகிறது. அதிலும் தன்னையும் தனது சகாக்களையும் போல அழுக்கடைந்த உடைகளுடன் வெயிலில் மாடாக உழைப் பதிலிருந்து விடுபட்டு சற்று மினுக்காக போய் வந்து கொண்டிருக்கிருன். இவைகளை எல் லாம் நினைத்துப் பார்த்து ஒருவகையில் திருப்தி அடைவான்.

சூரியன் அஸ்தமித்து ஒளி மங்கிய நேரம் தெருவிளக்குகள் பிரகாசிக்கத் தொடங்கின. ஏதோ சிந்தனையில் ஈடுபட்டிருந்த வேலப்பாச் சாரி அக்கம் பக்கத்து வீடுகளில் விளக்கேற்று வதைக் கண்டான். இன்னும் சிறிது நேரத் தில் மகனும் மருமகளும் வந்துவிடுவார்கள்; அந்த நேரத்தில் வீடு ஒளியற்று இருண்டு கிடப்பது அபசகுனமாக இருந்தாலும் இருக் கும் என்று எண்ணியவனய் சிறு தகர விளக் கேற்றிவைத்தான். வீட்டை இன்று வெகு

சுத்தமாக வைத்திருந்தான். வீடா அது! நான்கு மண் சுவர்களின் மத்தியில் 12-அடி அகலமுள்ள சிறுஇடம். மேலே தென்னங் கீத்துகள் வேய்ந்த கூரை; வெயில்காலத்தில் ஒரே புழுக்கம்; மழைகாலத்தில் ஒரே ஒழுக்கு இந்தமாதிரியான குடிசைகள் வேலப்ப ஆச்சாரியின் வீட்டைச் சுற்றி பத்து பதினை ந்தாவது இருக்கும். ஊருக்கு வீடு கட்ட உழைக்கும் இந்த உத்தமர்கள், தன் இட த்தை வசதி செய்துக் கொள்ள முடியாதா என்ன? வசதியுடன் வாழ்வதற்கு அவர்கள் என்ன! கொடுத்தா வைத்திருக்கிறார்கள்! நாள் முழுவதும் உழைத்து ஓய்ந்து வருப வன் எந்த இடத்தில் படுத்து உறங்கினா லென்ன?

பரந்து கிடக்கும் மதுரை நகரின் ஒதுக்குப் புறத்திலேதான் வேலப்ப ஆச்சாரியைப் போன்ற கல் தச்சர்களின் குடும்பங்கள் வாழ்க் கை நடத்தின. பொருளாதாரப் பிரச்னைகள் ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது. அரசிய லுக்கும் அவர்களுக்கும் வெகுதூரம். அவர் களுடைய சிந்தனைகள் எல்லாம் உழைப்பது உண்பது என்ற வட்டத்திற்குள்தான் அடங் கும். தன்னிலும் கீழாக இருந்தசிலர் பெரும் புள்ளிகளாய் உலாவுவதை அவர்கள் கண்டி ருக்கிறார்கள். இந்த முன்னேற்றம் அவர்கட்கு எவ்வாறு வந்தது என்று எண்ணிப்பார்த்தது கிடையாது. இவர்களின் முன்னோர்கள் பெரும் சிற்பிகளாக வாழ்ந்தவர்கள். அவர் களின் சிற்றுளிகளால் உருவாக்கப்பட்ட திருப்பணிகள் தமிழ் நாட்டில் எத்தனை எத் தனையோ உண்டு. இந்தத் திருப்பணிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கலாச்சாரங்கள் எத்தனை தெரியுமா? இவர்கள் மட்டுமென்ன? மதுரை நகரின் பெருங் கட்டிடங்கள் முதல் பலகட்டிடங்களை எழுப்பு வதற்கு அஸ்திவாரமாக உழைத்தவர்களும் இந்த கல்தச்சர்கள் தானே! இவர்கள் கை படாத எந்தக்கட்டிடமும் தமிழ் நாட்டில் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்

பரம்பரைச் சிற்பாச்சாரிய குடும்பத்திலே பிறந்த வேலப்ப ஆச்சாரியாரின் திறனைப் பற்றி ஒன்றுமே கூறவேண்டியதில்லை. தொ ழிலில் கைதேர்ந்தவன் என்ற பெயரையும் பெற்றிருக்கிறான். தன் தொழிலால் மற்றவன் வாழ்விற்கு வசதி செய்து கொடுத்த வேலப்ப ஆச்சாரியார் தனது வாழ்க்கைக்கு வசதிகளைத் தேடிக் கொள்ளவில்லை. இதைப்பற்றி யெல் லாம் எண்ணியது கிடையாது இன்று தொழில் செய்யமுடியாத பலவீனம் ஏற்பட்டு விட்டதே என்ற குறைதான் அவனுக்கு வேதனை அளித்தது. நம்மைப் போன்ற திறமையான உழைப்பாளிக்கு இந்த நிலை வந்தது ஏன்? இந்த எண்ணத்திலே அவன் ஆழ்ந்திருந்தான். வெளியே யாரோ ஒருவர் இருமிய சப்தம் கேட்டது.

"என்னவேலு! மருமகள் வந்துவிட்டாளா?"

"வா மாமா! உள்ளேவா. இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்கள். வரு கிற வேளைதான்.''

வந்தவர் எண்பது வயதைக் கடந்த பெரி யவர். இவருடைய பாட்டனார்தான் தளவாய் அரியநாத முதலியார் காலத்தில் மதுரைக் கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தையும் புதுமண்டபத்தையும் உருவாக்கியவர், இந்தப் பெரியவரும் தான் வலிமையாக இருந்த காலத்தில் பல அரும் திருப்பணி களைச் செய்தவர். இன்றும், கோவில்களுக்கோ அல்லது கட்டிடங்களுக்கோ இவரிடம் யோ சனை கேட்க அனேகம் பேர் வருவார்கள். பெரும் சிற்பாச்சாரியார் இவர் அங்குள்ள அத்தனை பேர்களுக்கும் வயதில் மூத்தவர். குரு! எல்லாம் இவர்தான்.

'நல்லது! இனிமேலாவது நீ நிம்மதியாக இருக்கலாம். உனக்கு வேண்டியதை மரு மகள் செய்வாள். உன் சமையல் கஷ்டம் தீர்ந்துவிடும். ஆனால் வேலு! அவர் சிறிது தயங்கினார்.

"என்ன மாமா?

"அட என்னத்தைச் சொல்வது? சரி. அவர்கள் வந்துவிட்டால், இரவில் எங்கே போய் தூங்குவாய்!"

"நானா? ஏன்?''

அவர் கேட்ட கேள்வியை நன்றாகப் புரிந்து கொண்டான் வேலப்பாச்சாரி. ஆம்! 12 அடி அகலமேயுள்ள ஒரே அறைதான் அவன் வீடு. மணமகனும், மணமகளும் இன்று இரவு ஏகாந்தமாக இருக்கத்தான் வேண்டும்!

"கவலைப்படாதே வேலு, என் வீட்டில் வந்து தூங்கலாம்." என்று இருமிக் கொண்டே சிறிது நாணத்துடன் சென்று விட்டார் அந்தப் பெரியவர்.

"நான் ஒன்றும் அவர்கள் வீட்டிற்குப் போகமாட்டேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் வேலப்பாச்சாரி. இருவரையும் முதன் முதலில் தனியாகத் தன் வீட்டில் விட்டு விட்டுத் தான் படுப்பதற்காக தெரிந்தவர்கள் வீட்டிற்குச் செல்ல நாணமாக இருந்தது. சுற்றத்தார்கள் கேலி செய்ய மாட்டார்களா என்ன? எங்காவது போய்த் தூங்குவேன். ஒண்டிக் கொள்ள ஏதாவது இடம் கிடைத்தாலும் போதும். ஒரு இரவு தானே! நானோ எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம்.'' என்று எண்ணியவாறே போர்த்திக் கொள்வதற்காக போர்வையை தயாராக எடுத்து வைத்துக் கொண்டான்.

இதற்குள் மகனும், மருமகளும், வேறுசில சுற்றத்தார்களும் வந்து விட்டார்கள். வந்த மணமக்கள் இருவரும் அவன் அருகில் வந்து வணங்கினார்கள். அவர்களை எப்படி வாழ்த்துவது என்ன பேசுவது என்றே புரியவில்லை. உபசாரமாக ஏதேதோ சொன்னான்

"சரி நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் சற்று வெளியே சென்று விட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு வேலப்பாச்சாரி வீட்டை விட்டு வெளியே வந்தான்.

மதுரை மாநகரம் பல மைல்கள் விரிந்து மின்சார விளக்கின் ஒளியிலே வெகு கவர்ச்சியாகக் காணப்பட்டது. இவ்வளவு பெரிய ஊரில் ஒரு மனிதன் படுக்க இடமா இல்லாமல் போகிறது! தெருத் திண்ணைகளில் ஒரு சிறு இடம் கிடைத்தாலும் போதும் என்று எண்ணினான்.

அவனுக்கு மதுரையிலுள்ள எல்லா இடங்களுமே தெரியும். இந்த நகரமே அவனது பரம்பரையால் நிர்மாணிக்கப்பட்டது அல்லவா? அங்குள்ள எல்லாக் கட்டிடங்களையும் அவன் நன்கறிவான். இது ஒரு மாளிகை போன்ற பெரிய வீடு. ஒரு பணக்காரனின் சுகவாழ்வுக்காக இவ்வளவு பெரிய கட்டிடம் எழும்பியிருக்கிறது. இதிலே எத்தனை தனித் தனியான அறைகள் தெரியுமா? ஒவ்வொரு அறையும் வேலப்பாச்சாரியின் வீட்டைப் போல நான்கைந்து மடங்கு பெரியது. தரைகள் எல்லாம் சலவைக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் முகம் கூடப் பார்க்கலாம்; அதிலே சோறு கூடப் பரிமாறிச் சாப்பிடலாமே! குளிக்கும் அறை என்ன! சமையல் அறை என்ன! படுக்கை அறை என்ன! சாப்பாட்டு அறை என்ன! எத்தனை விதமான அறைகள் இந்த வீட்டில் அடங்கியிருக்கிறது! இத்தனையும் ஒரு மனிதன் வாழ்விற்கு! வேலப்ப ஆச்சாரியும் ஒரு மனிதன் தானே! தன் கைகளாலேயே இக் கட்டிடத்தைக் கட்டிய வேலப்ப ஆச்சாரிக்கே ஒரு இரவைக் கழிக்க இடம் இல்லையா? அவனது வாழ்நாளிலேயே எட்டிப் பார்த்திராத சிந்தனைகள் அவனிடம் அலைமோதின. இது ஏன்! இது ஏன்!!

மதுரை நகரின் பிரதான தெருக்களிலே தெற்கு மாசி வீதியும் ஒன்று. ஆம்! தேரோடும் திரு வீதி; சுத்தமான, விசாலயான வீதி வேலப்ப ஆச்சாரியின் வீட்டுத் தரைகூட இப்படி இல்லை. இதை நினைத்ததும் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. தை மாதத்துக் குளிரை தாங்கக்கூடிய சக்தி அவனுக்கில்லை. தெருவெங்கும் மின்சார ஒளியினால் இரவே பகலாகிவிட்டதோ என்ற பிரமை ஏற்பட்டது வேலப்பாச்சாரிக்கு. நெருப்பு விளக்கிலாவது குளிரால் மரமரத்துப் போகும் கைகளைக் காட்டிச் சூடேற்றலாம். மின்சார விளக்கில் சூடேது! அவன் குளிரால் நடு நடுங்கினான் உடம்பில் சூடேற்றுவதற்காக சற்று வேகமாக நடந்தான்.

பல தெருக்களையும் கடந்து வந்து விட்டான். அந்தத் தெருவெங்கும் கம்பீரமான கட்டிடங்கள் அவன் கண்ணுக்குத் தெரிந்தன. தெற்காவணி மூல வீதி போலிருக்கிறது என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தத் தெரு எவ்வளவு பாழடைந்திருந்தது என்பது அவனுக்குத் தெரியும். இன்று செல்வம் கொழிக்கும் இந்தத் தெருவிலே காட்சியளிக்கும் பெரும்பான்மையான கட்டிடங்களை நிர்மாணிப்பதிலே பெரும் பங்கு கொண்டிருக்கிறான் வேலப்ப ஆச்சாரி. இந்தத் தெருவிலே "லட்சுமி நடக்கிறாளாம்". அவள் நடக்கிறாளோ அல்லது உட்கார்ந்திருக்கிறாளோ யாரும் பார்த்தது கிடையாது. ஆனால் தொழி

பாம்பே டிசைன்கள் முல்லைப்பூ மாலை
மாங்காய்மாலை நெக்லேஸ் குப்பா நெக்லேஸ்
செயின் வகையருக்கள்

S. S. முத்துசாமி, ஜுவலர்ஸ்
28 / 342 பெரியக்கடைவீதி, கோயம்புத்தூர்.

ரோமன் லெட்டர் மோதிரங்கள்
எனாமல் மோதிரங்கள் இன்னும் பலவித
அணிகளுக்கும் சிறந்த இடம்.

N.B; வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

நம்பிக்கையான சிறந்த தங்க நகைகள், வெள்ளி நகைகள்,
கல் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

கிடைக்குமிடம்:—

V. ருத்திரமூர்த்தி ஆச்சாரி சன்ஸ்,
கல்ச்சர் வைரங்கள் & நகைகள், தங்கம், வெள்ளி வியாபாரம்,
உடுமலைப்பேட்டை.

உரிமையாளர்கள்:
ரு. மீனாட்சிசுந்தரம்,
ரு. சுப்பிரமணியன்.

லாளர்களின் உழைப்புச் சக்தி தெருவெங்கும் களிநடம் புரிகிறது என்பதுதான் அவன் கண்ட உண்மை. நடந்து நடந்து காலோய்ந்து ஒரு கடையின் வாசற்படியிலே வந்தமர்ந்தான் வேலப்ப ஆச்சாரி.

“யாருடா! இங்கே உட்கார்ந்திருப்பது? உனக்கு உட்காருவதற்கு வேறே இடமில்லே! எங்காவது சத்திரம் சாவடி பார்க்கிறதுதானே இந்த நகைக் கடையிலே கன்னம் வைக்கலாம்னு பாக்கிறியா? என்று தன் வீரத்தைக் காட்ட மீசையை முறுக்கிக் கொண்டே ஒருவன் அதட்டினான். வேலப்ப ஆச்சாரிக்கு வந்த கோபத்தில், இந்தக் கடை வைத்திருக்கும் மனித இனத்திலேயே உயர்ந்த புண்ணியவான் எத்தனை மக்களின் வாழ்விலே கன்னம் வைத்துப் பெரிய மனிதனாகியிருக்கிறான் தெரியுமா? என்று சுடச் சுடப் பதில் கொடுத்திருப்பான். அவனுக்கிருந்த பசி மயக்கத்தாலும், நடந்து வந்த களைப்பாலும் வாயிலிருந்து வார்த்தையே வெளிவர வில்லை. தனது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள அந்த இடத்தை விட்டு நகரலானான்.

அன்னை மீனாட்சி கோவில் கொண்டு அனைவருக்கெல்லாம் அருள் பாலிக்கிறாளாமே! அவள் உறையும் கோவிலிலாவது தனது கட்டையைச் சாய்க்க இடம் இல்லாமலா போகிறது என்று நினைத்தான் வேலப்பாச்சாரி. தினமும் எத்தனை ஆயிரமாரயிம் மக்கள் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் இந்தக் கோவிலைப் பார்க்க வருகிறார்கள்! இப்பெருமையுடைய கோவிலைக் கட்டுவதற்காக பெரும் சிற்பாச்சாரியார்களை, அக்காலத்திலிருந்த மன்னர்கள் திருநெல்வேலிப் பகுதியிலிருந்து மதுரைக்கு அழைத்து வந்தார்களாம். அந்தப் பரம்பரையிலே வந்தவனல்லவா வேலப்ப ஆச்சாரி? இவனுக்கு கோவிலுக்குள்ளிருக்கும் ஆடி வீதியில் கூடவா ஒரு இரவைக் கழிக்க ஒதுக்கிடம் இல்லாமற்போகிறது!

அவனுடைய கால்கள் ஓய்ந்து விட்டன! எப்படியோ தள்ளாடித் தள்ளாடி கோவில் வரையிலும் வந்து விட்டான். கோவிலின் அர்த்த ஜாமப் பூஜை முடிந்து வெகுநேரமாகி விட்டதையுணர்ந்தான். கோவிலின் வெளிக் கதவுகள் அடைக்கப்படும் நேரம்! இனி அவனால் ஒரு அடி கூட நகரமுடியாது! முழு மூச்சையும் பிடித்துக் கொண்டு வெளிக் கதவைத் தாண்டி உள்ளே காலெடுத்து வைத்தான். “கோவில் மூடுகிற நேரத்தில் எவன்டா உள்ளே நுழைகிறது! வேளியே போ, வெளியே போ என்று ஒரு சேவகன் விரட்டினான்.
இந்த உலகத்தில் மனிதனை மனிதனாக மதிக்கும் உணர்ச்சி ஒருவருக்குமே இல்லாமற் போய்விட்டதா?

ஊரெல்லாம் சுகமாகப் படுத்துறங்க வீடுகளைக் கட்ட உதவியவனுக்கு இன்று ஒதுங்க இடம் இலலை! உலகம் போற்றும் கோவில்களைக் கட்டிய பரம்பரையிலே பிறந்த ஒருவனுக்கு அந்தக் கோவிலினுள்ளே நிற்கக்கூட உரிமை கிடையாது! இது ஏன்! ஏன்!! ஏன்!!! அவன் தலை சுழன்றது! நிற்க முடியாமல் தள்ளாடினான். உடல் முழுவதும் போர்வையைப் போர்த்துக் கொண்டு தெரு ஓரத்திலே படுத்து நன்றாகத் தூங்கி விட்டான்!

இந்தப் பொல்லாத உலகத்திலே நிகழும் நிகழ்ச்சிகளை எல்லாம் அனுதினமும் பார்த்துக் கொண்டே பவனி வரும் கதிரவன், ஒன்றும் அறியாவதனைப்போல, தன பொன்னான கிரணங்களைப் பரப்பிக் கொண்டே கீழ்த் திசையில் உதயமானான். வெகுநேரமாகியும் வேலப்ப ஆச்சாரியார் எழுந்திருக்கவே இல்லை.

இந்த உலகத்திலே ஒதுங்க இடம் இல்லாமல் தவித்த வேலப்ப ஆச்சாரியார் வேறு எந்த உலகத்தில் போய் இடம் தேடிக் கொண்டிருக்கிறாரோ?

இந்தக் கதை எழுத்தாளர் K. A. அப்பாஸ் அவர்களின் ஹிந்திக் கதையில் வரும் ஒரு சம்பவத்தைத்தழுவி எழுதப்பட்ட கற்பனை கதை.

பெரியோர் வரலாறு:

# "மாநாட்டுத் தந்தை!"

[ 'தொழிலுலகம்' ஆசிரியர் — குழித்தலை பிச்சமூர்த்தி. ]

விசுவகர்ம கலைச்சமூகம் உலகம் வாழ உழைக்கும் ஒப்பற்ற சமூகம் அச்சமூகத்தில் தோன்றிய பெரியார்கள் மக்கள் வாழ்வே தங்கள் வாழ்வு என வாழ்ந்து காட்டியவர்கள். கலை அன்னை பெற்றெடுத்த மாமணிகள் பலருள் மறைத்திரு முக்கண்ணுச்சாரி யவர்களும் ஒருவர்—அவரே தொழிற் சமூகத் தந்தை, இளைஞர்களின் இதய ஒளி வாழ்வின் வழிகாட்டி எனினும் மிகையாகாது அப்பெரியார் வாழ்வும் வாக்கும் இளைஞர்களாகிய நமக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக இருக்கும் எனக்கருதி, அன்னாரது வரலாற்றுச் சுருக்கத்தைஇவண் குறிக்கலானேன் பெரியார் முக்கண்ணுச்சாரியாரவர்களைப் பற்றி மறைந்த அறிஞர் தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் F.R.S.A., (London) அவர்களிடமிருந்து, சில ஆண்டுகட்குமுன் நான் கேட்டசெய்திகளின் தொகுப்பே இது. வாய்ப்பேற்படுங்கால் விரிந்த வரலாறு எழுத விழைவு கொண்டுள்ளேன்.

* * *

தொழிற் திறமை, நேர்மை உள்ளம் நிர்தாட்சண்யமான போக்கு, இனிய உரை, எழிலான தோற்றம், எடுப்பான நடை—இவையே தொழிற் சமூகத் தந்தை, மறைத் திரு முக்கண்ணுச்சாரியாரவர்களது திரு ஓவியம்!

பொது வாழ்வுக்கே தம் வாழ்வைப் பலியாக்கிக் கொண்டவர்கள். அவர்தம் செம்பணியைத் தொடந்தாற்ற அறிஞர் தி. மு. தெய்வசிகாமணியவர்களைத் தந்தவர்கள். கலைச் சமூகத்தின் புகழ் நிலைபெற நாள்பூரா உழைத்த உத்தமர் அவர்.

ஒரு நாடு விடுதலை பெறவேண்டின் அந்நாட்டுக் கைத்தொழில்களும், தொழில் வல்லுனர்களும் முதற்கண் முன்னேற்றம் பெற வேண்டும். உழைப்பாளர் உள்ளம் கொதித்தால், கலை குன்றும், மக்கள் வாழ்வும் மங்கும் —இதுவே மறைத் திரு முக்கண்ணுச்சாரியாரவர்களது மணிவாக்கு. அவரது சொற்பொழிவில் நகைச்சுவையும், பல நாட்டறிஞர்கள் கருத்தும் பளிச்சிடும் இந்தியாவில் மலிந்து கிடக்கும் பிற்போக்கான சமூகங்கள் வளர்ச்சியுறாவிடில் நாட்டு விடுதலையோ, முன்னேற்றமோ வெற்றிபெறுதென தைரியமாக மேடையேறிக் கூறிய முதல் மனிதர்! அரசியல் தெளிவடையாது அறியாமையில் உழன்றிருந்த அக்கால விசுவகர்ம சமூக மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கியவர் 'மாநாடுகள்' என்ற கூட்டத்தைக் கண்டவர் அவர்தான் மக்கள் விழிப்புணர்ச்சிப் பெறவேண்டி விசுவகர்ம மாநாடுகள் ஐந்து தமது நேர்ப்பார்வையில் நடத்தி ஆட்சியாளர்களுக்குக் கோரிக்கையை அனுப்பினவர்கள் எனவே நன்றி மறவா நம்மினத்தவர்கள் 1934-ல் பெரியாரைப்பெற்ற பொன் பூமியான குடந்தையில் மாநாடொன்று கூட்டி, "மாநாட்டுத் தந்தை" என்ற சிறப்பான பட்டம் வழங்கினார்கள்.

அவரைப் பெற்றெடுத்தக் குடும்பம்—வாழையடி வாழையாகப் புகழ் பெற்றக் குடும்பம். அவரது பாட்டனார்கள் அரசவையில் கலைஞர் குழுவில் ஒருவராக இருந்திருக்கின்றனர். பாட்டனாருள் ஒருவர் மராட்டிய மாவீரன் சிவாஜியின் பேரவையில் சிற்பாச்சாரியாகத் திகழ்ந்தாராம். மன்னருடன் சினங் கொண்டு 200 ஆண்டுகட்குமுன் தஞ்சை மாவட்டம

தென்குடித் திட்டை என்னும் பாடல் பெற்ற ஸ்தலத்தில் குடியேறினராம். இவரது பெரிய பாட்டனர் வெள்ளைவாரணச்சாரியார் என்பவர். இளைய பாட்டனர் முத்துசாமி ஆச்சாரியார் வலுவான தேக அமைப்புடையவர். சிற்றுளி செதுக்கு வேலையில் அவரை விஞ்சியவர் அக்காலத்தில் எவரும் இல்லையாம். அவரது கலைத் திறனின் காட்சியாக இன்றும் தஞ்சை சரஸ்வதி மகால் அரண்மனை விமான அமைப்புகள் இருப்பதைக் காணலாம். மராட்டிய மொழிப் பயிற்சியும் உண்டாம். இவரது நான்கு மகவுள் இரண்டாவது மைந்தரின் புதல்வரே நம் கட்டுரைத் தலைவர் பெரியார் முக்கண்ணச்சாரியாரவர்கள்.

கலைச் சமூகத்தின் கண்மணியாம் நம் தெய்வசிகாமணியைப் பெற்ற பெரியார் தி.மு. முக்கண்ணச்சாரியார் அவர்தம் தர்மபத்தினி பார்வதி அம்மையார் ஆகியோர் வள்ளுவப் பெரியார் வாக்கான 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற பொன் மொழிக் கேற்பத் தோன்றி வாழ்ந்தவர்கள். 'அழகிலும், அன்புரையாற்றுவதிலும், விருந்தோம்பலிலும் பார்வதி அம்மையாருக்கு இணை இல்லை. என்று நம் தலைவர் கூறியதைப் பல தடவை நான் கேட்டதுண்டு. அவரது அன்புக்குப் பூரணமாக வாழ்ந்த அம்மையார் 1935-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 16-ம் நாள் இயற்கை எய்தினது குடும்பத்துக்கே பேரிடியாக இருந்தது. தந்தை பெரியார் தி. மு. முக்கண்ணச்சாரியாரவர்கள் தமிழாராய்ச்சியிலும் சோதிட ஆராய்ச்சியிலும் நிபுணராம். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் தலை மாணவர் தியாகராச செட்டியாரிடம் தமிழ்ப் பயின்றவர் என்றால் அவர் புலமையைச் செப்ப இயலுமா வேதாந்த ஆராய்ச்சிகளிலும் பெரியார் அவர்களுக்கு ஈடுபாடு உண்டாம். அடிக்கடி கோவிலூர் மடாலயம் சென்று மறைத்திரு அடிகளுடன் உறவாடுவது வழக்கமாம். வேதாந்த சாகரத்தில் மூழ்க விழைபவர் என்றாலும் நாட்டு மக்களது பொதுவாழ்வில் நேர்மை, நாணயம் மிளிர பாடுபடவும் ஆர்வம் கொண்டவராம். நகர நிர்மாணத் தொண்டில் அளவிடாப்பற்று உண்டென்பதற்கு அத்தாட்சி—அவர் 'ஒரு மாமாங்கம்' அதாவது பன்னிரண்டு ஆண்டுகள் குடந்தை மாநகர் ஆட்சி மன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார் என்பதே போதும். ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தொடர்ந்தாற்போல் பன்னிரண்டு ஆண்டுகள் பதவியில் இருந்ததை எண்ணிப்பாருங்கள்! குடந்தையில் உள்ள பல பெரும் பாட்டைகளும், அதன் பக்கத்திலே நீண்டு நிற்கும் 'மாகினி' 'ஜாக்நெட்' மரத் தோற்றங்களும் இவரது நினைவாக இன்றும் இருப்பதைக் காணலாம். காந்தியத்


## சிற்ப சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த

**அழகிய பலநிற போட்டோ பிரேம்கள், போர்டுகள் நவ நவமாகச் செய்து நமது வாடிக்கைக் காரர்களுக்கு அளித்து வருகிறோம்,**

—தேவைகட்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்-

**மாருதி ஆர்ட் & கிராப்ட்,**

(சென்னை அரசாங்க ஆதரவு பெற்ற ஸ்தாபனம்)

**44, கங்கையம்மன் கோவில் தெரு,**

**ராயப்பேட்டை :: சென்னை.**

## எங்கிரேவிங் ஒர்க்ஸ்,

நெ. 110, பெரிய தெரு,

[ஆர்யபவன் அருகில்] கும்பகோணம்.

### ஆபரணத்தை அழகு செய்வது

### எங்கிரேவிங் ஒர்க்ஸ்

தாங்கள் எங்கிரேவிங் வேலைகளும், வைரக் கட்டிட வேலைகளுக்கு நூதன டிசைன்களும் குறித்த நேரத்தில் தவறாது செய்து கொடுத்து வருகிறோம்.

புதிய டிசைன்களில் நகை கேட்லாக் தயாரிக்கின்றோம்.

**M. வெங்கடேசன்.**

ஸ்தாபிதம் 1926

தபால் பெட்டி நெ 13 போன் நெ. 10

அகில இந்தியா

ரிஜிஸ்டர் நெ. 127307

K. G. G. சீல்

30-வருட அனுபவம் வாய்ந்தது. தங்கம், வெள்ளி, நகைகளுக்கும், பாத்திரங்களுக்கும் சிறந்த இடம்.

K. G. குருசாமி ஆச்சாரி & சன்ஸ்

நகை வியாபாரம்,

கோபிச்செட்டிபாளையம்.

ரிஜிஸ்டர் நெ. 2794 (P. A. சீல்) தந்தி: ஜுவல்லரி சேலம்



திருநாவுக்கரசு ஜுவல்லரி

எங்களிடம் P. A. சீல்

கல் பதித்த தங்க நகைகள் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் ஒரேவிலையில் கிடைக்கும்.

உரிமையாளர்:-

P. ஆறுமுக ஆச்சாரி,

தங்க நகைகள் உற்பத்தி & விற்பனையாளர்,

திருச்சி ரோட், குகை சேலம்.

கிளை

திருநாவுக்கரசு ஜுவல்லரி,

செவ்வாய்பேட்டை சேலம்-2

தில் தீவிரபற்றுமிக்கவர். பொதுமேடையில் தமிழ் வழங்கப்படாத காலம். தமிழுரையாற்றுவதே தகுதிக்குறைவான தென 'கனதனவான்கள்' நினைத்தவேளை-கடல்மடை திறந்தாற்போல் எல்லாமேடைகளிலும் எதைப் பற்றியும் பேசுவார். அதுகருதியே 1887-ல் சென்னையில் கூடிய 3-வது அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தஞ்சை மாவட்டத்தின் தொழிலாளர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழகத்தில் நடைபெறும் மாபெரும் மாநாட்டில், தமிழர் நிரம்பிய பேரவையில் தமிழ்முழக்க மில்லாதது. பெரியார் முக்கண்ணுச்சாரியாரவர்களுக்குப் பெரிதும் வருத்தமாக இருந்தது; எழுந்து நல்ல தமிழில் எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் போர்முரசென வீரசொற்பொழி வாற்றினர்.

பாலகங்காதர திலகர், விபின் சந்திரர் போன்ற விடுதலைப் போரின் வீரப்பிரிவை சார்ந்த–வெள்ளையர்களால் 'பயங்கரவாதிகள்' என்று கருதப்பட்டவர்கள் எல்லோருமே இவரது சொற்திறன் கண்டு, கைகுலுக்கினர். பெசண்டம்மையாரும் தமது பத்திரிகையிலும், எழுதிய அரசியல் நூல்களிலும் அறிஞர் முக்கண்ணுச்சாரியாரது சுதேசிப்பற்று, தொழிலாளர் நலம் பற்றிய கருத்துகளை ஆதரித்து குறிப்புரை எழுதியுள்ளார். அடுத்து அலகாபாத்தில் நடைபெற்ற (1888) காங்கிரஸ் மகாசபைக்கும் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். குடந்தை கலை நிலையத்தைத் தோற்றுவித்தவர் இவரே. இவரது திறமை கண்ட சென்னை மாநிலக்கல்லூரி (PRESIDENCY COLLAGE) தலைவரது வேண்டுகோள் ஏற்று 45-ம் ஆண்டில் அரசாங்க அலுவல் ஏற்று தஞ்சை, கோவைக்கு மாற்றலாகி 12 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றூர். ஆசார அனுஷ்டானத்தில் நம்பிக்கை மிக்கவர். குலநல ஒழுக்கத்தில் குணக்குன்று அவர். தாம்பிறந்த சமூகம் நாட்டில் உயர்ந்து எல்லையிலாப் புகழ் எய்த வேண்டுமென்பது இவரது இதயக் கணவு. அதற்காகப் பல மாநாடுகள், பத்திரிகைகள், போராட்டங்கள் கண்டார். நாடெல்லாம் சுற்றி சமுகச் சங்கங்களைத் தோற்றுவித்தார். சமுக இளைஞர்களைக் கண்டாலே வெகுப்பிரியம் இவருக்கு. இவ்வாருக அறிவுத் தெளிவுபட்டதிலிருந்து நாட்டு மக்கள், பிறந்த சமுதாயம் வளர்ச்சிக்காக உழைத்த உத்தமர் ஸ்ரீமுக ஆண்டு மாசித் திங்கள் முதல் தேதி-சிவராத்திரியன்று இயற்கை எய்தினர்கள். பெரியார் முக்கண்ணுச்சாரியவர்களது மறைவு குறித்து அறிஞர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் எம்மிடம் கூறின செய்தி, பெரியாரது ஞானத்வத்தை நன்கறியலாம்.

பெரியார் முக்கண்ணுச்சாரியாரவர்களுக்கு நோய் நொடி ஒன்றும் வராதாம். தினசரி உடற்பயிற்சி செய்யும் பழக்கமுடையவராம். வயோதிகப் பருவத்திலும் நூலெழுதும் திறன் பெற்றிருந்தாராம். 'பரவசக்கன்னி' நூல் சரிபார்த்து வெளியிட முனைந்தாராம். ஒரு நாள்-மகாசிவராத்திரி முதற்நாள்! தாம் அன்று அடங்கப்போவதாக முன்கூட்டியே எதிர்வீட்டு நண்பர் முதலானேர்க்குச் சொல்லியிருந்தாராம் இச்சேதி புதல்வர்களுக்குத் தெரியாது. விபரம் கூருது பூசைக்குறிய தேங்காய், பழம், பூ முதலானவற்றை வாங்கி வைக்கச் சொன்ஞராம். இரவு மணி மூன்று மெத்தையில் படுத்துறங்கிய அண்ணல் தெய்வசிகாமணியை அவர்தம் அன்பு அன்னையார் அழைத்து ஓடிவந்து பார்த்த போது, தந்தையார் சுகாசனத்தில் அமர்ந்திருந்தாராம். அவரது நிலையை அறிந்த அன்னையார் கணவருக்குப் பால் கொடுக்க முனைந்த போது சைகையால் தெய்வசிகாமணியாரைவிட்டுக் கொடுக்கச் சொல்லி, பின்னர் தான் ஏனையோரை வரிசைக் கிரமமாய்க் கொடுக்கச் சொன்ஞராம். மைந்தர்களுக்கு அபயஸ்தம் காட்டி 'இங்கு வந்து விட்டது' என்று விரலை வாயினுள் வைத்து அமைதிக் காட்டினர். கற்பூரம் கொளுத்தப்பட்டது, தந்தையார் சமாதியுற்ருர்—இக் கதையை அறிஞர் தி. மு. தெய்வசிகாமணியாச்சாரியாரவர்கள் எம்மிடம் கூறினபோது அவரது கண்கள் நீரால் கலங்கிக் கொண்டிருந்தன! ஒரு சிவராத்திரியின் போதுதான் இதைக் கூறி, எமக்கு விருந்தளித்தார்கள்!

மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனக் கொண்டு உழைத்து, ஊர்வாழ வாழ்ந்து ஒப்பற்ற செயல்களாற்றிய மறைத்திரு முக்கண்ணுச்சாரியார் அவர்களது சடலம் சென்னை மூலக்கொத்தளத்தில் சிறக்க சமாது செய்யப்பட்டது.

வாழ்க அவர் புகழ்! வளர்க அவரது எண்ணம்!!

# ஓவியக்கலை.

[ குடந்தை ந. பஞ்சாபகேசன் ]

இறைவனின் படைப்பின் நுட்பத்தை எடுத்துக் காட்டுவதே கலை எனப்படும். சிற்பம், சித்திரம், காவியம், இசை நடனம் இவைகளை நுண்கலை ( FINE ARTS ) எனக்கூறுவார்கள். இப்புலமையில் ஓவியக்கலைஞனும் காவியக் கலைஞனும் ஒரே நிலையில் தானயிருக்கிறார்கள். இயற்கையின் எழிலை கண்டு அதன் மாண்பை உணர்ந்து எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என்ற இலக்கண வண்ணங்களைக் கொண்டு கவிச் சித்திரமாக தீட்டுகிறான் கவிஞன். இயற்கையின் வனப்பையும் எவ்வகைச் செய்திகளையும் உவமங்காட்டி, செயற்கை வர்ணங்களைக் கொண்டு உயிர் ஓவியமாகத் தீட்டுகிறான் ஓவியப்புலவன்.

படித்தவர்கள் தான் காவியத்தின் சுவையை உணரமுடிகிறது. ஆனால் படிக்காத பாமரனும் ஓவியத்தைப் பார்த்து, அதன் மாண்பை உணர்ந்து தன் கருத்துக்களை கூறமுடியும். எனவே இந்த ஆற்றல் ஓவிய சிற்பக் கலைகளுக்கு எனவாய்த்த தனிச்சிறப்பு எனக் கூறலாம். இக்கலை மனிதனின் கற்கருவி காலத்திலிருந்து படிப் படியாக வளர்ச்சியுற்று இருக்கிறது என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## பிற நாடுகளில்

இக்கலை எந்த நாட்டில் தொன்று தொட்டு வளர்ந்து வருகிறதோ! அந்நாட்டை நாகரீகமுள்ள நாடு எனக்கூறுவார்கள் பண்டை காலத்தில் எகிப்து, பாபிலோனியா சுபேரியா போன்ற நாடுகளில் ஓவியக்கலை சிறப்புற்றிருந்ததாக அங்கு கிடைத்த புதை பொருள் ஆராய்ச்சிகாரர்கள் கூறுகிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தீட்டப் பட்டிருப்பினும் சிறந்த ஓவியர்களால் சிறந்த முறையில்' தீட்டப்பட்டிருக்கின்றன.

## பாரத நாட்டில்

நமது நாட்டில் இதுவரை கண்டறியப் பட்டவைகளிலிருந்து இந்தியாவின் தொன்மையான நாகரீகம் எனக் கூறப்படும். சிந்து சமவெளி நாகரீகத்தில் கிடைத்த மண்பாடங்களிலிருந்து அந்நியநாட்டுக் கலைக்கு நமது நாட்டு கலை எந்த விதத்திலும் தாழ்ந்தது அல்ல எனத் தெரிகிறது.


## தமிழகத்திலே

தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ் நாட்டில் சிற்பக்கலை வல்லுனர் இருந்து இருக்கின்றனர் எனத் தெரிகிறது. சிற்பக் கலைக்கு முதற்கண் வேண்டுவது ஓவியக் கலையே. எனவே, ஓவியக்கலை தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டே இருந்து வருவதாகத் தெரிகிறது. மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களைப் பார்க்கும் போது சங்ககாலத்தில் ஓவியக்கலை நன்னிலையில் இருந்ததாகத்தெரிகிறது. கூத்து எனும் நடனக்கலையில்தேர்ச்சி பெறவேண்டுமானால் ஓவியக்கலையிலும் பயிற்சி பெறவேண்டும். என சங்க காலத்தில் விதி இருந்தது சிறந்த நடன மாதாக விளங்கிய மாதவி ஓவியச் செந்நூலில் துறைபோனவள் என்று மணிமேகலை கூறுகின்றது.

"நாடக மகளிற்கு நன் கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூற் கிடைக்கையும்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை"

என்ற அடிகளை நோக்கும்போது, சங்க காலத்தில் ஓவியச் செந்நூல் ஒன்று வழக்கில் இருந்ததையும், நடன மாதற்குறிய பல

எல்லாவிதமான எலக்ட்டிரிக்
சாமான்களுக்கும்
ஜெயச்சந்திர மின்விசை
மோட்டார்களுக்கும்



மணி எலக்ட்டிரிக்
ஸ்டோர்ஸ்
14/39 மில் ரோடு
கோயமுத்தூர்.

N. K. சுப்பிரமணியம் ஆச்சாரி & Bro
ஷராப் வியாபாரம்.
26/270 பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

எங்களிடம் நவ நாகரீகத்திற்கேற்ற டிசைன்களில் மிகவும் உத்திரவாதமுள்ள தங்கம், வெள்ளி நகைகளும், பாத்திரங்களும் கிடைக்கும். மொத்த வியாபாரிகளுக்கும் சரசமான கூலியில் குறிப்பிட்ட காலத்தில் கியாரண்டியுடன் நகைகளும் தயார் செய்து கொடுக்கப்படும்.

பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும்
N. K. S. சீல் உத்திரவாதமுள்ளது.

வகை நிலைகளையும் (பாவம்) உணர்த்தும் ஓவியம் வரையப்பட்டிருந்ததையும், நடன மாதரும் நங்கையர்களும் இக்கலையில் நுண்ணிய புலமை பெற்று இருந்தனர் என்பதையும் அறியலாம்.

> "எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி
> நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
> கண்ணுள் வினைஞர்"

என்றம்துரைக் காஞ்சி அடிகளை நோக்கும்போது அக்காலத்தில் கண்ணுள் வினைஞராகிய ஓவியர்கள் இக்கால இயற்கைப் படம் (Natural Artist) வரையும் ஓவியர்களுக்கு எந்த வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்ல, என்பதுடன் அக்கால ஓவியர்களின் சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறது. மாதவியின் நடன அரங்கேற்ற மண்டபத்தில் பலவகை ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. அம்மண்டபத்தை ஓவிய விதானம் எனக் கூறப்பட்டது.

இங்ஙனமாக சங்க காலத்திற்குப் பிறகு பல்லவர் காலத்திலும், சோழ அரசர்கள் காலத்திலும் ஓவியக்கலை நன்னிலையில் இருந்தது பல்லவர்கள் காலத்து ஓவியக் கலையின் அருமை பெருமைகளுக்கு சித்தன்னவாசல் கோயில் முன் வாயிலில், கோவிலுக்குள் நுழைபவர்களை வாருங்கள், வாருங்கள் என இன்முகம் காட்டி அழைப்பதுபோல் அமைந்துள்ள இரு நடன மாதர்களின் ஓவியங்களே சிறந்த சான்று ஆகும்.

மகேந்திரவர்மனது காலம் கி. பி. 600 –630 எனக் கூறுகின்றனர். இதுவே திருநாவுக்கரசு சுவாமிகள் இருந்த காலமும் ஆகும். எனவே, அத்தனை காலமாகியும், இன்னும் அதன் எழில் குன்றாது இருப்பது வியப்பே.

நிற்க, சோழ அரசர்கள் காலத்து ஓவியங்களைக் காணவேண்டுமானால், தஞ்சைப் பெரிய கோவிலில் கி. பி. 11ம் நூற்றாண்டில் வரையப்பட்ட ஓவியங்களே போதிய சான்றாகும். திருத்தொண்டத்தொகை அருளிச் செய்த சுந்தரர் இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட வரலாற்று நிகழ்ச்சியும், சுந்தரரும் சேரமானும் கைலை செல்லும் காட்சியும் கண்கவர் வனப்புடையவை.

ESTD 1936. REGD 1382.

**30 ஆண்டுகளாக புகழ் பெற்றது**




★ ஏஜண்டுகள் ★ தேவை ★

Pro: K. பழனியப்ப கவுடர்,
ராஜாளி பீடி கம்பெனி
கெம்பட்டி காலனி :: கோயமுத்தூர்.

"சிற்பி" திங்கள் ஒரு முறை வெளிவருகிறது.

| | | |
|---|---|---|
| போஷகர் நிதி | ... | ரூ 25—0—0 |
| சந்தா அனுபந்தங்கள் மலர் உள்பட | .... | ரூ 4—0—0 |
| ஆறு மாதத்திற்கு | ... | ரூ 3—0—0 |

'சிற்பி அலுவலகம்' அம்மாப்பேட்டை (தஞ்சை)

இங்ஙனமாக ஓவியக்கலையை தமிழர்கள் பரம்பரையாக வளர்த்து வந்தார்கள். கோவி ல்களில் இதிகாச புராண நிகழ்ச்சிகளை குறி க்கும் ஓவியங்களே யன்றி, தினசரி வாழ்க் யில் பயன் படும் ஒவ்வொரு பொருள் மீதும் ஓவியக்கலை தன் ஆட்சியைச் செலுத்தியது எப்பொருளையும் கலைக்கண் கொண்டு பார் க்கும் நோக்கும் வாழ்க்கையைக் கலையோடு அமைத்துக் கொள்ளும் திறனும் அன்பும் ஆற்றலும் தமிழர்களுக்கென வாய்த்த தனி ப்பண்பாகும். அன்று தொட்டே இன்று வரையில் ஆடைகளில் ஓவியங்களை ( எம் பிராய்டரி ) வரைந்து கொள்வதும் வீட்டு வாசற்படிக்கட்டுகளிலும் நிலைகளிலும் பல அரிய சித்திரவேலைப்பாடுகளை அமைப்பதும் வீட்டு வாசலில் கோலமிடுவதும் ஆபரண ங்களை சித்திரவேலைப்பாடுகளுடன் செய்து பூட்டிக் கொள்வதும், படுக்கும் கட்டில் பாத் திரம் முதலியவைகளில் சித்திரங்களை பொரி ப்பதும் தமிழர்களின் பரம்பரையான கலைப் பண்பாகும். இங்ஙனமாக ஓவியக்கலை நல்ல வளர்ச்சியுற்று இருப்பினும் 18-ம் நூற்று ண்டில் இதன் வளர்ச்சி சிறிது தடைப் பட்டது எனக் கூறலாம். எனினும் அதன் மதிப்புக் குறையவில்லை பின் இராஜா இரவி வர்மா என்ற ஓவியனால் ஓவியக் கலையில் மறுமலர்ச்சி ஒற்பட்டது எனக் கூறலாம். முற்கால ஓவியர்கள் சுவர்களினும், திரை களிலும், பச்சிலைகளின் மூலமாய் எடுக்கப் பட்ட வர்ணங்களைக்கொண்டு எழுதிவந்தார் கள். பின மேல் நாட்டு ( Oil Painting ) எண்ணெய் வர்ண ஓவியம் வரையும் முறை யைக் கற்று இக்கலையை நன் முறையில் வளர்த்த பெருமை இரவிவர்மா அவர்களையே சாரும்.

20ம் நூற்றுண்டில் சினிமா படம் எடுப் பதற்கு ஓவியக்கலையின் உதவி மிகவும் அவ சியமாகிவிட்டது. இதன் காரணமாகவும் பட மூலமாக கல்வி போதித்தால் எளிதில் மாணவர்கள் புரிந்துகொள்ள முடியும் என்ற காரணத்தாலும் பத்திரிக்கைகளுக்குப் படம் அவசியம் தேவையாக இருப்பதாலும், ஓவி யக்கலை நல்ல வளர்ச்சி பெற்றது. இக்காலத் தில் ஒருபடம் ஒருவர் வரைய அப்படத்தை Block எடுத்து பல ஆயிரம் படங்களாக மக் களுக்குத் தரக்கூடிய அளவுக்கு ஓவியக்கலை நல்ல வளர்ச்சிப் பெற்றிருக்கிறது.

## பண்டைய ஓவியம் கூறும் உண்மை.

பழைய ஓவியங்களைப் பார்ப்பதால் அக் கால மக்களின் நாகரீகம், அவர்கள் அணிந் திருந்த ஆடை, அணி முதலியவைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளலாம் எனவே, பழைய ஓவி யங்களையும் சிற்பங்களையும் காக்க வேண்டு வது நமது கடமையும் கருத்துமாகும்.

ஓவியத்தை வரைபவர்க்கே அன்றி பார்ப் பவர்களுக்கும் மனதில் இன்பத்தை எழச் செய்யக்கூடிய ஆற்றல் உடையது ஓவியக் கலை. மனிதனின் ஒவ்வொரு செயலும் அழ காகவும் சித்திரமாகவும் இருக்கவேண்டு மெனச் சொல்கிறோம்.

## ஓவியத்தால் அடையும் பயன்.

ஒரு பெண் பண்டம் பாத்திரங்களை அழ காக வைத்திருந்தால் அவள் எவ்வளவு சித்திரமாக வைத்திருக்கிறாள் என்று அவ ளைக் கூறுகிறார்கள். ஒரு அழகிய பெண்ணைப் பார்த்தால் "படத்தில் எழுதலாம்" அப்படி யிருக்கிறாள் என்று வியப்பாகப் பலர் கூறு வதை நாம் கேட்டிருக்கலாம். இங்ஙனமாக ஓவியக்கலை தினசரி வாழ்க்கையில் தன் ஆட்சியைச் செலுத்திக் கொண்டுதான் வருகிறது.

எனவே, இக்கலை மேலும் மேலும் நல்ல வளர்ச்சி பெற சிற்பிகளின் சந்ததியை காப் பாற்றி கலையை வளர்ப்போமாக.

○

---

## வாசகர்களுக்கு.

கோவை கூட்ட நிகழ்ச்சிகளும், மது ரையில் நடைபெற்ற மூதுரைக்கதை வெற்றிச் செய்தியும், கோபிச்செட்டிபாளையத் தில் நடைபெற்ற விஸ்வகுல ஐக்கிய ஆண்டு விழாச் செய்திகளும், கோவையில் நடக்க விருக்கும் மாநாட்டு பொதுச் செயலாளர் புகைப்படங்களும், அடுத்த இதழில் வெளி வரும்.

---

திருப்திக்கு உத்திரவாதம்! நாணயத்திற்கு சிறந்த இடம்!!

அழகினுக்கு அழகுசெய்வது

-: ஆபரணங்கள் :-



வைரம், பவுன் நகைகளுக்கும், வெள்ளிப் பாத்திரங்களுக்கும் சிறந்த இடம்.

V. P. வடிவேல் ஆச்சாரி,

ஜுவல்லர்ஸ்,

124 பெரியத்தெரு, கும்பகோணம்.



டாக்டர்,

K. K. N. ராமஸ்வாமி L.H.M.,

ரெஜிஸ்டர்ட் பிஸிஷியன்,

அம்மாபேட்டை (தஞ்சை ஜில்லா)

ஆசிரியரும் வெளியிடுபவரும், ந. சண்முகம், எழுத்துப்பட்டரை
தெரு, அம்மாபேட்டை. தஞ்சை. (தமிழ் நாடு.) அச்சிட்டது
ஸ்ரீ கிருஷ்ணா பிரஸ், அம்மாபேட்டை, தஞ்சை.

அழகுக்கு அழகு செய்வது ஆபரணங்கள்

மிகுந்த திருப்தி
தரக்கூடிய
அழகிய
வேலைத் திறன்
மிக்க




ரில் நம்பிக்கையானவை.

பொன்,
வைர
நகை
களுக்கு

## P. A. ராஜு செட்டியார் & பிரதர்


"ஸ்வர்ண மாளிகை"

கோயமுத்தூர்.

தந்தி: ராஜா.   போன் 268.   தபால் பெட்டி: 139.

# வெளிவருகிறது!

இசையும் காதலும்
இரண்டறக்கலந்த
இன்பக் காவியம்



தியாகராஜ் புரொடக்ஷன்ஸ்

# அமரதேவி

காமிரா: வின்ஸென்ட் | ஆர்ட்: சங்கரன் குட்டி | கதை, வசனம்: K.S. கோபாலகிருஷ்ணன்

இசையமைப்பு: S. ராஜேஸ்வரராவ் | ஸ்டுடியோ: வாஹினி | தயாரிப்பு: S. ராமகிருஷ்ணன்

டைரக்ஷன்: வேதாந்தம் ராகவய்யா

A K COPAL & CO.